ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1520 - 2007 ඔක්තෝබර් 19 වැනි සිකුරාදා - 2007.10.19
1520 ஆம் இலக்கம் - 2007 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 19 ஆந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

பகுதி I : தொகுதி (I) – பொது

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)

	பக்கம்
சனாதிபதியின் பிரகடனங்களும் பிறவும்	–
சனாதிபதியின் நியமனங்களும் பிறவும்	944
அமைச்சரவையின் நியமனங்களும் பிறவும்	949
அரசாங்க சேவை ஆணைக்குழுவின் நியமனங்களும் பிறவும்	–
நீதிச்சேவை ஆணைக்குழுவின் நியமனங்களும் பிறவும்	–
மற்றைய நியமனங்களும் பிறவும்	–
பதிவாளர் நியமனங்களும் பிறவும்	–
அரசாங்க அறிவித்தல்கள்	949
விலைக்கட்டளைகள்	–
இலங்கை மத்திய வங்கியின் அறிவித்தல்கள்	–
இலங்கை அரசாங்க கணக்கு விபரங்கள்	–
வரவு செலவுத் திரட்டுக்கள்	950
அரசாங்கப் பகுதிகளின் நானாவித அறிவித்தல்கள்	960
மாலுமிகளுக்கு அறிவித்தல்கள்	–
மதுவரிக் கட்டளைச் சட்ட அறிவித்தல்கள்	–

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான

முக்கிய அறிவித்தல்கள்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகையின் ஒவ்வொரு பகுதியினதும் ஒவ்வொரு தொகுதியின் இறுதியிலும் ஒவ்வொரு மாதத்தின் முதல் வார வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டிருக்கும் வாராந்த வர்த்தமானியிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் தேதிகள், நேரங்கள் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதியிலும் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசி நாள் **வர்த்தமானியில் அறிவித்தல் பிரசுரமாகும் தேதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணியாகும்.** வெற்றிடங்களுக்கான விண்ணப்பங்களுக்கும் கேள்விப்பத்திரங்களுக்கும் கடைசித் தேதியும் நேரமும், ஏல விற்பனைக்குத் தேதியும் நேரமும் குறிக்கும் அறிவித்தல்கள் தயாரிக்கப்படும்போது மேற்கண்ட மாற்றத்துக்குக் கவனஞ் செலுத்துமாறும் பிரசுரமாகும் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறையுள்ளவர்கள் ஆக்கபூர்வமாகவும் வெற்றிகரமாகவும் பங்குகொள்வதற்கியலும் வகையில் அறிவித்தல்கள் அரசாங்க அச்சகத்திற்கு அனுப்பப்படச் செலவாகும் நேரத்தையும் அவை பிரசுரமாகும் தேதியையும் கருத்திற் கொள்ளுமாறும் எல்லா அரசாங்கத் திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆதியன அறிவுறுத்தப்படுகின்றன.

வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கான எல்லா அறிவுறுத்தல்களும் கண்டிப்பாக அவை பிரசுரமாகும் தேதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணிக்கு முன்** இத்திணைக்களத்தை வந்தடைய வேண்டும். அதாவது 2007, ஒற்றோபர் 26 ஆந் தேதி வெள்ளிக்கிழமை வர்த்தமானியிற் பிரசுரிக்கப்பட வேண்டிய அறிவித்தல்கள் 2007, ஒற்றோபர் 12 ஆந் தேதி நண்பகலிலோ அதற்கு முன்னரோ அரசாங்க அச்சகத்தை வந்தடைய வேண்டும்.

லக்ஷ்மன் குணவர்தன,
அரசாங்க அழுத்தகர்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2007 ஆம் வருடம் சனவரி மாதம் 01 ஆந் திகதி.

சனாதிபதியின் நியமனங்களும் பிறவும்

2007 இன் இல. 421

டீஆர்எவ்/ஆர்ஈசீரீ/815/படைத்தலைவர் /பொது

அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் **அங்கீகரிக்கப்பட்ட**

பதவியுயர்வுகள்

பின்வரும் பெயருடைய இளைப்பாறிய முப்படை அதிபர்கள் 2007.10.01 ஆந் திகதியிலிருந்து அவர்களது பெயர்களின் முன்னே குறிப்பிட்டுள்ள பதவிக்கு பதவியுயர்த்துதல் அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது:-

தரைப்படை

1. லெப்டினன்ட் ஜெனரால் ஜே. ஈ. டீ, பெரேரா விஎஸ்வீ பிஎஸ்சீ என்டீசி பிஎஸ்சீ எவ்பீஜஎம் ஜெனரால்
2. லெப்டினன்ட் ஜெனரால் ஜீ. டீ. ஜீ. என் செனெவிரத்ன வீஎஸ்வி யூஎஸ்பீ என்டிசீ ஜெனரால்

கடற்படை

3. றியர் அத்மிரால் டீ. பீ. குணசேக்கர என்டீசீ பீஎஸ்சீ அத்மிரால்
4. றியர் அத்மிரால் ஏ. டப் . எச். பெரேரா விஎஸ்வீ என்டீசீ பீஎஸ்சீ அத்மிரால்

வான் படை

5. எயார் வைஸ் மார்ஷல் பீ. எச் . மெண்டிஸ் எம்பீஜஎம் ஜடீசீ பீஎஸ்சீ எயார் சீப் மார்ஷல்
6. எயார் வைஸ் மார்ஷல் டப். டீ. எச். எஸ். டப். குணதிலக்க என்டீசீ பிஎஸ்சீ எயார் சீப் மார்ஷல்
7. எயார் வைஸ் மார்ஷல் டீ. சீ. பெரேரா வீஎஸ்வீ என்டீசீ பீஎஸ்சீ எயார் சீப் மார்ஷல்
8. எயார் மார்ஷல் ஓ. எம். ரணசிங்க ஆர்டப்பி வீஎஸ்வீ யூஎஸ்பி என்டீசீ பீஎஸ்சீ எயார் சீப் மார்ஷல்
9. எயார் மார்ஷல் ஜே. வீரக்கொடி ஆர்டப்பி வீஎஸ்வீ யூஎஸ்பி என்டீசீ பீஎஸ்சீ எயார் சீப் மார்ஷல்

அதியுத்தமனாரின் ஆணைப்படி,

கோடாபய ராஜபக்ஷ,
ஆர்டப்பி ஆர்எஸ்பி பீஎஸ்சீ,
செயலாளர்,
பாதுகாப்பு, பொது மக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பற்றிய அமைச்சு

கொழும்பு
2007, செப்தெம்பர் 19,

10 - 517

2007 இன் இல. 422

தேசிய மாணவ வீரர் படையணி

அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்ட பதவி உயர்த்துதல்

2007, மாச்சு மாதம் 1 ஆந் திகதியிலிருந்து தற்காலிக மேஜர் ஆக :

உ/4161 கப்ரின் எம்டப்ளிவ் எஸ் சிசிரகுமார
உ/4174 கப்ரின் எஸ்ஜபீ த சொயிஸா (பெ)
உ/4280 கப்ரின் டப்கேபீஎன் குணசேக்கர
உ/4285 கப்ரின் எஸ்எம் உபாலி பண்டார
உ/4301 கப்ரின் ஜீஜீஎன் சமரசிங்க
உ/4353 கப்ரின் டப்வீ அநுருத்திகா (பெ)
உ/4512 கப்ரின் ஜஎம்கே இலங்கன்திலக்க
உ/4539 கப்ரின் ஆர்ஏஎல்எஸ் பிரியதர்ஷண
உ/4546 கப்ரின் கேஏடப்ளிவ் கொடிசிங்க
உ/4568 கப்ரின் ஆர்ஆர்டீஎஸ் கருணாதிலக்க (பெ)

அதியுத்தமனாரின் ஆணைப்படி,

கோடாபய ராஜபக்ஷ,
ஆர்டப்பீ, ஆர்எஸ்பீ, பீஎஸ்சீ,
செயலாளர்,
பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு,
சட்டமும் ஒழுங்கும் பற்றிய அமைச்சு.

கொழும்பு,
2007.

10-518

2007 இன் இல. 423

இலக்கம் : DIRE/RECT/86 (x) AY

இலங்கை தரைப்படை - நிரந்தரப் படை

அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பெற்ற அதிகாரவாணைக்கு நியமனம் செய்தல்

பின்வரும் பெயருடைய கெடெற் உத்தியோகத்தர் 2006 யூலை மாதம் 31 ஆந் திகதி முதல் இலங்கைத் தரைப்படையின் நிரந்தரப்படையில் இரண்டாம் லெப்டினன்ட் வரிசைப்பதவியில் அதிகாரவாணைக்கு நியமனம் செய்தலும் அத்திகதி முதல் இலங்கைத் தரைப்படை மருத்துவச் சிறப்பணிக்கு உள்ளடக்குதலை அங்கீகரிப்பதில் அதியுத்தமராம் சனாதிபதி அவர்கள் களிகூர்ந்துள்ளார்கள் :-

சி/56190 கெடெற் உத்தியோகத்தர் கவிதா ஹர்ஷனி பதிராஜ

அதியுத்தமனாரின் ஆணைப்படி,

கோடாபய ராஜபக்ஷ,
ஆர்டப்பீ, ஆர்எஸ்பீ, பீஎஸ்சீ,
செயலாளர்,
பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு,
சட்டமும் ஒழுங்கும் பற்றிய அமைச்சு.

கொழும்பு,
2007,செத்தெம்பர் 20.

10-512

2007 இன் இல. 424

DIRE/RECT/*86* (x) AY

இலங்கை தரைப்படை - நிரந்தரப் படை

அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பெற்ற அதிகாரவாணைக்கு நியமனம் செய்தல்

பின்வரும் பெயருடைய கெடெற் உத்தியோகத்தர் 2006 திசெம்பர் மாதம் 31 ஆந் தகதி முதல் இலங்கைத் தரைப்படையின் நிரந்தரப்படையில் இரண்டாம் லெப்டினன்ட் வரிசைப்பதவியில் அதிகாரவாணைக்கு நியமனம் செய்தலும் அத்திகதி முதல் இலங்கைத் தரைப்படை மருத்துவச் சிறப்பணிக்கு உள்ளடக்குதலை அங்கீகரிப்பதில் அதியுத்தமராம் சனாதிபதி அவர்கள் களிகூர்ந்துள்ளார்கள் :-

சி/ 56321 கெடெற் உத்தியோகத்தர் மஹேசிகா பிரமோத் தில்ஹானி உடுமலகல உலுவிடிகே

அதியுத்தமனாரின் ஆணைப்படி,

கோடாபய ராஜபக்ஷ,
ஆர்டப்பீ, ஆர்எஸ்பீ, பீஎஸ்சீ,
செயலாளர்,
பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு,
சட்டமும் ஒழுங்கும் பற்றிய அமைச்சு.

கொழும்பு,
2007,செத்தெம்பர் 20.

10-516

2007 இன் இல. 425

டீஆர்எவ்/ஆர்ஈசீரீ/997/ஏவை.

இலங்கை தரைப்படை - தொண்டர் படை

அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரவாணைக்கு நியமனமும் உள்ளடக்குதலும்

பின்வருவோரின் பெயர்களின் முன்னே குறிப்பிட்டுள்ள திகதியிலிருந்து கீழ் சிரேட்டத்தன்மைக்கேற்ப இலங்கை தரைப்படை தொண்டர் படையணியின் தற்காலிக லெப்டினன்ட், கர்னல், தற்காலிக மேஜர், தற்காலிக கப்ரின் லெப்டினன்ட் பதவியிலிருந்து அதிகாரவாணைக்கு நியமனம் செய்தலும் அன்றிலிருந்து பொறியியல் சேவை படையணியிடம் உள்ளடக்குதலும் அதியுத்ததமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது :-

(அ) தற்காலிக லெப்டினன்ட் கர்னல்
(1) திரு. ஆனந்த ரணசிங்க - 22.05.2006

(ஆ) தற்காலிக மேஜர் :
(1) திருமதி மலிகஸ்பே கோரலகே ராஜித்த பிரபாஷினி நாணயக்கார - 22.05.2006

(இ) தற்காலிக கப்ரின் :
(1) திரு. தாசின் கெதர விஜித்த ஹர்சின் குமார பண்டார - 2006.04.05
(2) திரு. ஹந்தாரி தேவ நயனஜித் கோபல ஜினசேன- 2006.04.05
(3) திரு. வெலிகமகே உமேப் பாலுத்த கருணாரத்ன 2006.04.05
(4) திரு. மாவனான ஹெட்டிகே சமந்த இந்திக்க - 2006.04.05
(5) திரு. ஜயசேக்கர கருணாநாயக்க முதியன்சேலாகே ரஞ்சன குமார ரணசிங்க - 2006.04.05
(6) திரு. அபேவிக்கிரம பட்டகொடகே சுமித் - 2006.04.05
(7) திரு.உரஸ்ஸ வத்தகே பிரியந்த குமார - 2006.04.05
(8) திருமதி ரசிக்கா பிரியதர்ஷனீ ஹேரத் - 2006.04.05
(9) திரு. விஜயவர்தனகே நிஷாந்த மஞ்சுள - 2006.04.05
(10) திரு. பட்டபந்திகே சுமுது பிரசன்ன பந்துசேன - 2006.04.17
(11) திரு. சீக்குபதுகே திலன்க பிரதீப் த சில்வா - 2006.05.03
(12) திரு. கருணாநாயக்க முதியன்சேலாகே மெலன் பிரதீப் பண்டார கருணாநாயக்க - 2006.04.05
(13) திருமதி பல்பொல லொக்குலியனகே கல்யாணி பிரியங்கிகா அல்விஸ் - 2006.02.22
(14) திரு. நாரங்கொட லேகம்லாகே வெசில் தினேஸ் - நாரங்கொட 2006.05.22

(ஈ) லெப்டினன்ட் :
(1) திரு. துமிந்த வஜிர குமார குலரத்ன - 2006.04.05
(2) திரு. அலவத்தகே கபில தில்ருக் - 2006.04.05
(3) திருமதி இந்திரா ரன்ஜனீ குகுலு கோரலே - 2006.05.22

அதியுத்தமனாரின் ஆணைப்படி,

கோடாபய ராஜபக்ஷ,
ஆர்டப்பீ, ஆர்எஸ்பீ, பீஎஸ்சீ,
செயலாளர்,
பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு,
சட்டமும் ஒழுங்கும் பற்றிய அமைச்சு.

கொழும்பு,
2007,மாச்சு 28

10-510

2007 இன் இல. 426

டீஜவீஎவ்/ஆர்ஈசீரீ/45/ஏவை.

இலங்கை தரைப்படை - தொண்டர் படை

அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரவாணைக்கு நியமனமும் உள்ளடக்குதலும்

இலங்கை தரைப்படை தொண்டர் படையணியின் பின்வரும் பெயருடைய அதிகாரம்பெற்ற உத்தியோகத்தர்கள் 2006 யூலை மாதம் 22 ஆந் திகதியிலிருந்து குறிப்பிட்டுள்ள சிரேட்டத்தன்மையின் பிரகாரம் லெப்டினன்ட் (உபகரணங்கள் கட்டுப்பாட்டாளர்) (பொதுக் கடமை)

ஆக அதிகாரவாணைக்கு நியமனம் செய்வதும் பெயரின் முன்னே குறிப்பிட்டுள்ளள ரெஜிமென்ட்/படையணிகளிடம் உள்ளடக்குதலும் அதியுத்ததமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகராம் வழங்கப்பட்டுள்ளது :-

1. அதிகாரம் பெற்ற உத்தியோகத்தர் II மாரசிங்க பேடிகே சிரில் மாரசிங்க இலங்கை சிங்க ரெஜிமென்ட் (தொண்டர்)
2. அதிகாரம் பெற்ற உத்தியோகத்தர் II விஜயமுணி துரகே சிரிவர்தன கமுனு வீரர் படையணி (தொண்டர்)
3. அதிகாரம் பெற்ற உத்தியோகத்தர் II உடவெல கவிகலே கெதர அபேசேக்கர வீரசிங்க இலங்கை சிங்க ரெஜிமென்ட் (தொண்டர்)
4. அதிகாரம் பெற்ற உத்தியோகத்தர் II யயாப்பா முதியன்சேலாகே மஹிந்த சேனாரத்ன விஜயபாகு காற்படை ரெஜிமென்ட் (தொண்டர்)
5. அதிகாரம் பெற்ற உத்தியோகத்தர் II ரவுலதொல ஆரச்சிலாகே அமரரத்ன இலங்கை பீரங்கிப் படை (தொண்டர்)
6. அதிகாரம் பெற்ற உத்தியோகத்தர் II நிரிஅல்லகே குமாரசிங்க நிரிஅல்ல இலங்கை தேசிய பாதுகாப்பு படையணி (தொண்டர்)
7. அதிகாரம் பெற்ற உத்தியோகத்தர் II கதன்கமுவே கெதர அசோக்க கருணாஜீவ கஜபா ரெஜிமென்ட் (தொண்டர்)
8. அதிகாரம் பெற்ற உத்தியோகத்தர் IIவர்ணகுலசூரிய மஹலேகம்லாகே ஜோர்ஜ் எம்மானுவேல் கஜபா ரெஜிமென்ட் (தொண்டர்)
9. அதிகாரம் பெற்ற உத்தியோகத்தர் II அத்தநாயக்க முதியன்சேலாகே சிரிபால இலங்கை தேசிய பாதுகாப்பு படையணி
10. அதிகாரம் பெற்ற உத்தியோகத்தர் II ராஜகுரு முதியன்சேலாகே ரணசிங்க விஜயபாகு காற்படை ரெஜிமென்ட் (தொண்டர்)
11. அதிகாரம் பெற்ற உத்தியோகத்தர் II விதானே கெதர பியசிரி பண்டார இலங்கை தேசிய பாதுகாப்பு படையணி
12. அதிகாரம் பெற்ற உத்தியோகத்தர் II தென்னகோன் முதியன்சேலாகே திலக்கரத்ன விஜயபாகு காற்படை ரெஜிமென்ட் (தொண்டர்)
13. அதிகாரம் பெற்ற உத்தியோகத்தர் II திசாநாயக்க முதியன்சேலாகே விஜேரத்ன பண்டா இலங்கை தேசிய பாதுகாப்பு படையணி
14. அதிகாரம் பெற்ற உத்தியோகத்தர் II ராஜமந்திரி கெதர உபுல் வசந்த குமார இலங்கை படைக்களப் படையணி (தொண்டர்)
15. அதிகாரம் பெற்ற உத்தியோகத்தர் II நவரத்ன வீரசிங்க முதியன்சேலாகே தர்மதாச இலங்கை சிங்க ரெஜிமென்ட் (தொண்டர்)
16. அதிகாரம் பெற்ற உத்தியோகத்தர் II சிராலகே விமலதாச விஜயபாகு காற்படை ரெஜிமென்ட் (தொண்டர்)
17. அதிகாரம் பெற்ற உத்தியோகத்தர் II காரியவசம் சிங்கப்புலி தந்திரிகே பிரதீப் கபில குமார விஜயபாகு காற்படை ரெஜிமென்ட் (தொண்டர்)
18. அதிகாரம் பெற்ற உத்தியோகத்தர் II ரன்ஹொட்டி பண்டாரலாகே ரத்நாயக்க இலங்கை தேசிய பாதுகாப்பு படையணி
19. அதிகாரம் பெற்ற உத்தியோகத்தர் II மேஸ்திரி வர்னியெல் சில்வா இலங்கை தரைப்படை முன்னோடிப் படையணி
20. அதிகாரம் பெற்ற உத்தியோகத்தர் II ரத்னதிலக்க முதியன்சேலாகே சுனில் ஜயசேக்கர பண்டார இலங்கை தரைப்படை யுத்த உபகரண படையணி
21. அதிகாரம் பெற்ற உத்தியோகத்தர் II முததுபண்டாகே அனுர திசாநாயக்க இலங்கை தேசிய பாதுகாப்பு படையணி
22. அதிகாரம் பெற்ற உத்தியோகத்தர் II தங்ஹாமிகே பிரேமதிலக இலங்கை தேசிய பாதுகாப்பு படையணி
23. அதிகாரம் பெற்ற உத்தியோகத்தர் II ராஜவர்தன கெதர பிரேமசிறி இலங்கை காற் படை (தொண்டர்)
24. அதிகாரம் பெற்ற உத்தியோகத்தர் II அத்தநாயக்க முதியன்சேலாகே லக்ஷ்மன் அத்தநாயக்க இலங்கை தேசிய பாதுகாப்பு படையணி
25. அதிகாரம் பெற்ற உத்தியோகத்தர் II ஹேவாவசம் சருக்காலிகே சில்வா இலங்கை தேசிய பாதுகாப்பு படையணி
26. அதிகாரம் பெற்ற உத்தியோகத்தர் II திவாகர முதியன்சேலாகே திலக் வசந்த திவாகர இலங்கை தேசிய பாதுகாப்பு படையணி
27. அதிகாரம் பெற்ற உத்தியோகத்தர் II யக்தெஹிகே பிரேமதிலக இலங்கை சிங்க ரெஜிமென்ட் (தொண்டர்)
28. அதிகாரம் பெற்ற உத்தியோகத்தர் II மொஹொட்டலாகே பஸ்நாயக்க சுத்தஹாமி இலங்கை தேசிய பாதுகாப்பு படையணி
29. அதிகாரம் பெற்ற உத்தியோகத்தர் II படதுருகே விமலசேன இலங்கை தேசிய பாதுகாப்பு படையணி
30. அதிகாரம் பெற்ற உத்தியோகத்தர் II வன்னிநாயக்க முதியன்சேலாகே ரஞ்சித் வன்னிநாயக்க இலங்கை தேசிய பாதுகாப்பு படையணி
31. அதிகாரம் பெற்ற உத்தியோகத்தர் II கிரிபண்டாகே திவாகர ரத்நாயக்க இலங்கை காற்படை (தொண்டர்)
32. அதிகாரம் பெற்ற உத்தியோகத்தர் II புஞ்சி நைதேகே உபாலி ரணசிங்க கஜபா ரெஜிமென்ட் (தொண்டர்)
33. அதிகாரம் பெற்ற உத்தியோகத்தர் II ஏக்கநாயக்க வலிவேரிய வர்தன நிமல் ஏக்கநாயக்க இலங்கை படைப்பல படையணி (தொண்டர்)
34. அதிகாரம் பெற்ற உத்தியோகத்தர் II வித்தான மொஹொட்டாலகே ஹேரத் பண்டா இலங்கை காற்படை (தொண்டர்)
35. அதிகாரம் பெற்ற உத்தியோகத்தர் II ஜயசூரிய ஆரச்சிலாகே சிசிர ரஞ்சித் ஜயசூரிய கஜபா ரெஜிமென்ட் (தொண்டர்)
36. அதிகாரம் பெற்ற உத்தியோகத்தர் II ஹப்பன் பேடிகே ரஞ்சித் பிரேமகுமார இலங்கை தேசிய பாதுகாப்பு படையணி
37. அதிகாரம் பெற்ற உத்தியோகத்தர் II மொரவக்க கோரலகே நிமல் கருணாரத்ன கஜபா ரெஜிமென்ட் (தொண்டர்)
38. அதிகாரம் பெற்ற உத்தியோகத்தர் II கலுபத்திரன்னஹலாகே ராஜா ரஞ்சித் தர்மசிரி இலங்கை தரைப்படைசேவை படையணி (தொண்டர்)
39 அதிகாரம் பெற்ற உத்தியோகத்தர் II மாதுகொட ராலலாகே லால் பத்மசிறி குணரத்ன இலங்கை தரைப்படை வைத்திய படையணி (தொண்டர்)

அதியுத்தமனாரின் ஆணைப்படி,

கோடாபய ராஜபக்ஷ,
ஆர்டப்பீ, ஆர்எஸ்பீ, பீஎஸ்சீ,
செயலாளர்,
பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு,
சட்டமும் ஒழுங்கும் பற்றிய அமைச்சு.

கொழும்பு,
2007, ஏப்பிறல் 10.

10-511

2007 இன் இல. 427

டீஜவீஎவ்/ஆர்ஈசீரீ/49/ஏவை.

இலங்கை தரைப்படை - தொண்டர் படை

அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரவாணைக்கு நியமனங்களும் உள்ளடக்குதலும்

\பின்வரும் பெயருடைய கெடெற் உத்தியோகத்தர்கள் 2005 திசெம்பர் மாதம் 17 ஆந் திகதியிலிருந்து குறிப்பிட்டுள்ள சிரேட்டத் தன்மையின் பிரகாரம் இலங்கை தரைப்படை தொண்டர் படையின் இரண்டாம் லெப்டினன்ட் பதவியிலிருந்து அதிகாரவாணைக்கு நியமனம் செய்தலும், அன்றிலிருந்து குறிப்பிட்டுள்ள ரெஜிமென்ட்/ படையணிகளிடம் உள்ளடக்குதலும் அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது:-

1. கெடெற் உத்தியோகத்தர் - தெவ்வாஹந்தி தநுஷ்க குமார த சில்வா இலங்கை படைக்கள படையணி (தொண்டர்)
2. கெடெற் உத்தியோகத்தர் - நவீன் பிரமித்த தலதாவத்த இலங்கை பீரங்கிப்படை (தொண்டர்)
3. கெடெற் உத்தியோகத்தர் - கருண முனிகே நாமல் சுமித் சாரங்க இலங்கை சிங்க ரெஜிமென்ட் (தொண்டர்)
4. கெடெற் உத்தியோகத்தர் - ரங்கே பண்டாரலாகே தரங்க குமார வன்னிநாயக்க விஜயபாகு காற்படை ரெஜிமென்ட் (தொண்டர்)
5. கெடெற் உத்தியோகத்தர் - உமேஸ் தில்ஹான் ரத்நாயக்க கஜபா ரெஜிமென்ட் (தொண்டர்)
6. கெடெற் உத்தியோகத்தர் - உடகே ராலாகே அமில தநுஷ்க ஜயவர்தன கமுனு வீரர் படையணி (தொண்டர்)
7. கெடெற் உத்தியோகத்தர் - உடவத்தகே லசந்த புஷ்ப குமார இலங்கை தரைப்படை யுத்த உபகரணங்கள் அணி (தொண்டர்)
8. கெடெற் உத்தியோகத்தர் - பிட்டிகல ஆசாரிகே சுமேத பிரசாத் பிட்டிகல இலங்கை தரைப்படை சேவை படையணி (தொண்டர்)
9. கெடெற் உத்தியோகத்தர் - வர்ஷமான தேவகே லலித் தில்ஷான் இலங்கை தேசிய பாதுகாப்பு படையணி (தொண்டர்)
10. கெடெற் உத்தியோகத்தர் - காங்கர முதியன்சேலாகே சமீர பண்டார காங்கர இலங்கை சிங்க ரெஜிமென்ட் (தொண்டர்)
11. கெடெற் உத்தியோகத்தர் - அஞ்சன சமந்த விதானபத்திரண இலங்கை தேசிய பாதுகாப்பு படையணி
12. கெடெற் உத்தியோகத்தர் - லியனரத்னகே மஞ்சுள சுரங்க கமுனு வீரர் படையணி (தொண்டர்)
13. கெடெற் உத்தியோகத்தர் - கலங்சூரிய ஆரச்சிகே சந்திரதிலக்க ஜயவீர விஜயபாகு காற்படை ரெஜிமென்ட் (தொண்டர்)
14. கெடெற் உத்தியோகத்தர் - தெஹிகஸ்பே ரணவக்ககே ரிஷான் துமிந்த ரணவக்க இலங்கை காற்படை ரெஜிமென்ட் (தொண்டர்)
15. கெடெற் உத்தியோகத்தர் - உடுவக்க ஹேவாகே தநுஷ்க ரொஷான் உடுவக்க இலங்கை தேசிய பாதுகாப்பு படையணி
16. கெடெற் உத்தியோகத்தர் - ஹங்கமுவே மொஹொட்டி தரங்க சம்பத் இலங்கை தேசிய பாதுகாப்பு படையணி
17. கெடெற் உத்தியோகத்தர் - கமராலலாகே மதுக்க கௌசல்ய பிரசாத் கருணாசேன இலங்கை தேசிய பாதுகாப்பு படையணி
18. கெடெற் உத்தியோகத்தர் - கொம்பு ஹிரோஷ் இந்திக்க விஜேரத்ன இலங்கை தேசிய பாதுகாப்பு படையணி
19. கெடெற் உத்தியோகத்தர் - ரணதுங்கவே தனுஷ்க சுரேஷ் பெண்டிக்ட் பிரனாந்து கஜபா ரெஜிமென்ட் (தொண்டர்)

அதியுத்தமனாரின் ஆணைப்படி,

கோடாபய ராஜபக்ஷ,
ஆர்டப்பீ, ஆர்எஸ்பீ, பீஎஸ்சீ,
செயலாளர்,
பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு,
சட்டமும் ஒழுங்கும் பற்றிய அமைச்சு.

கொழும்பு,
2008, மே 05.

10-509

2007 இன் இல. 428

டி/ஆர்எப்/ 824/என்வை/03/02.

இலங்கை கடற்படை - நிரந்தரக் கடற்படை

அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்ட பதவியுயர்வுகள்

2007, சனவரி மாதம் 01 ஆந் திகதியிலிருந்து தற்காலிக கப்ரின் ஆக:

கொமாண்டர் (சைகை) நிலந்த ஹீனட்டிகல, ஆர்டப்பீ, இகப - என்ஆர்எக்ஸ் 0323
கொமாண்டர் (ஆயுதங்கள்) உஸ் ஹெட்டிகே சுஜீவ ருவன் பெரேரா - ஆர்எஸ்பீ, பீஎஸ்சீ, இகப - என்ஆர்எக்ஸ் 0321
கொமாண்டர் (ஏஎஸ்டப்) வாவிட்ட விதானலாகே தொன் அர்னஸ்ட் மெரில் சுதர்ஷண, ஆர்எஸ்பீ. பிஎஸ்சீ. இகப - என்ஆர்எக்ஸ் 0320
கொமாண்டர் (மாலிமா) தொன் சமரசிங்க ஆரச்சிலாகே அஜித் பாலித்த சமரசிங்க ஆர்டப்பீ, ஆர்எஸ்பீ,இகப - என்ஆர்எக்ஸ் 0470
கொமாண்டர் (மாலிமா) காசியப்ப கோடாபய போல், யூஎஸ்பீ,இகப - என்ஆர்எக்ஸ் 0465
கொமாண்டர் (ஆயுத) ஆனந்த குமார குருகே, பிஎஸ்சீ, இகப - என்ஆர்எக்ஸ் 0468

அதியுத்தமனாரின் ஆணைப்படி,

கோடாபய ராஜபக்ஷ,
ஆர்டப்பீ, ஆர்எஸ்பீ. பிஎஸ்சீ,
செயலாளர்,
பாதுகாப்பு, பொது மக்கள் பாதுகாப்பு,
சட்டமும் ஒழுங்கும் பற்றிய அமைச்சு.

கொழும்பு,
2007, யூலை 23.

10-675

2007 இன் இல. 429

இலக்கம் : டீ/ஏ/எவ்/8/1

இலங்கை வான்படை

அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்ட பதவியுயர்வு

பின்வரும் பெயருடைய உத்தியோகத்தர் அவரது பெயரின் முன்னே குறிப்பிட்டுள்ள திகதியிலிருந்து தற்காலிக எயார் கொமதார் பதவிக்கு உயர்த்தப்பட்டுகிறார் :-

குழுக் கப்ரின் பிரசன்ன பாதிய ரத்நாயக்க (01291)- பொ. க. 2007. 05. 01

அதியுத்தமனாரின் ஆணைப்படி,

கோடாபய ராஜபக்ஷ,
ஆர்டப்பீ, ஆர்எஸ்பீ, பீஎஸ்சீ,
செயலாளர்,
பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு,
சட்டமும் ஒழுங்கும் பற்றிய அமைச்சு.

கொழும்பு,
2007,மே 17.

10-507

2007 இன் இல. 430

இலக்கம் : டீ/ஏஎவ்/10/11.

இலங்கை வான்படை

அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்ட பதவியுயர்வுகள்

பின்வரும் பெயருடைய உத்தியோகத்தர்கள் அவர்களது பெயர்களின் முன்னே குறிப்பிட்டுள்ள திகதியிலிருந்து தற்காலிக விங் கொமாண்டர் பதவிக்கு உயர்த்தப்படுகிறார்கள் :

ஸ்கொட்ரன் லீடர் ஹேரத் ஏக்கநாயக்க முதியன்சேலாகே பிரசாந்த பண்டார ஏக்கநாயக்க (01698) உ. பொ. க. 2005.10.05

ஸ்கொட்ரன் லீடர் உபுல் சனத் குமார சேனாரத்ன (01686) உபகரணங்கள் 2005.10.05

ஸ்கொட்ரன் லீடர் வருண சமிந்த சேனாரத்ன (01697) உ. பொ. க. 2006.04.05

அதியுத்தமனாரின் ஆணைப்படி,

கோடாபய ராஜபக்ஷ,
ஆர்டப்பீ, ஆர்எஸ்பீ, பீஎஸ்சீ,
செயலாளர்,
பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு,
சட்டமும் ஒழுங்கும் பற்றிய அமைச்சு.

கொழும்பு,
2007,மாச்சு 29.

10-508

2007 இன் இல. 431

இலக்கம் : டீ/ஏ/எவ்/21/2.

இலங்கை வான்படை

அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்ட பதவியுயர்வுகள்

பின்வரும் பெயருடைய உத்தியோகத்தர்கள் அவர்களது பெயர்களின் முன்னே குறிப்பிட்டுள்ள திகதியிலிருந்து நிரந்தர ஸஸஞகொட்ரன் லீடர் பதவிக்கு உயர்த்தப்படுகிறார்கள் :

தற்காலிக ஸ்கொட்ரன் லீடர் கொடிமரக்கலகே சுமுது சிந்தன ரொத்ரீகு (01756) வி. நி. உ. 2004.05.14

தற்காலிக ஸ்கொட்ரன் லீடர் சமன் ரெக்ஸி உடுகும்புர (01740) உபகரணங்கள் 2004.05.14

தற்காலிக ஸ்கொட்ரன் லீடர் தர்ஷன துஷார முணசிங்க (01749) உபகரணங்கள் 2004.08.14

தற்காலிக ஸ்கொட்ரன் லீடர் யசங்க சாரநாத் சூரியஆரச்சி (01771) உபகரணங்கள் 2005.01.16

தற்காலிக ஸ்கொட்ரன் லீடர் தீபால் முணசிங்க (01810) உபகரணங்கள் 2005.02.17

தற்காலிக ஸ்கொட்ரன் லீடர் லொக்குபாலசூரியகே ஹர்ஷ நந்தன ஜயதிலக்க (01857) உபகரணங்கள் 2007.01.07

தற்காலிக ஸ்கொட்ரன் லீடர் சனத் திமுத்து கழுபோவில (01858) உபகரணங்கள் 2007.01.07

தற்காலிக ஸ்கொட்ரன் லீடர் ராஜகருணா மொஹொட்ட அப்புஹாமிலாகே ஷானக்க சுரேன் ராஜகருணா (01738) உபகரணங்கள் 2007.02.01

தற்காலிக ஸ்கொட்ரன் லீடர் மத்தும ஆரச்சிகே சரத் நந்தன விஜேசிங்க (01861) நிர்வாகம் 2007.03.06

தற்காலிக ஸ்கொட்ரன் லீடர் ஹல்கஹ விதானகே ருவன் சந்திம (01864) நிர்வாக/ரெஜி 200703.23

தற்காலிக ஸ்கொட்ரன் லீடர் ஜயசிங்க ஆரச்சிகே ருவன் சிசில் ஜயசிங்க (01867) நிர்வாக/ரெஜி 2007.03.23

தற்காலிக ஸ்கொட்ரன் லீடர் பஸ்டியன் ஆரச்சிகே ரவிந்த ஜயசிங்க (01869) நிர்வாக/ரெஜி 2007.03.23

தற்காலிக ஸ்கொட்ரன் லீடர் தரிந்து சஞ்ஜீவ சேமசிங்க (01871) பி. பொ. க. 2007.03.23

தற்காலிக ஸ்கொட்ரன் லீடர் லசன் சன்ன திசாநாயக்க (01854) பி. பொ. க. 2007.04.05

தற்காலிக ஸ்கொட்ரன் லீடர் அசங்க பிரபாத் லியனஆரச்சி (01856) இயக்க/வான் 2007.04.19

தற்காலிக ஸ்கொட்ரன் லீடர் மெரகல்கே ஹேலி கொலின்ஸ் ரூபசிங்க (01870) நிர்வாக/ரெஜி 2007.04.23

தற்காலிக ஸ்கொட்ரன் லீடர் தொன்கொலுவகே தொன் தம்மிக்க வசந்த குமார (01873) நிர்வாக 2007.06.16

தற்காலிக ஸ்கொட்ரன் லீடர் ராம ஜயம் ராமலிங்கம் (02107) வி. நி. உ. 2007.07.16

அதியுத்தமனாரின் ஆணைப்படி,

கோடாபய ராஜபக்ஷ,
ஆர்டப்பீ, ஆர்எஸ்பீ, பீஎஸ்சீ,
செயலாளர்,
பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு,
சட்டமும் ஒழுங்கும் பற்றிய அமைச்சு.

கொழும்பு,
2007,பெப்புருவாரி 24.

10-513

அமைச்சரவையின் நியமனங்களும் பிறவும்

2007 இன் இல. 432

அமைச்சரவையினால் பின்வரும் நியமனம் செய்யப்பட்டுள்ளது:

இலங்கை விஞ்ஞான சேவையின் I ஆம் வகுப்பைச் சேர்ந்த திரு. டபிள்யு. ஏ. டி. ஏ. விஜேசூரிய அவர்கள் 2007, மே மாதம் 07 ஆந் திகதியிலிருந்து நடைமுறைக்கு வருமாறு மறுகட்டளை பிறப்பிக்கும் வரை வனவுயிர் பாதுகாப்பு பணிப்பாளர் நாயகமாக.

10-506

2007 இன் இல. 433

அமைச்சரவையினால் பின்வரும் நியமனம் செய்யப்பட்டுள்ளது:

திரு. ஜே. எம். ஜே. பி. பண்டார அவர்கள் 2007, மே மாதம் 28 ஆந் திகதியிலிருந்து நடைமுறைக்கு வருமாறு மறுகட்டளை பிறப்பிக்கும் வரை பொது நம்பிக்கைப் பொறுப்பாளர் திணைக்களத்தின் பொது நம்பிக்கைப் பொறுப்பாளராக.

10-505

அரசாங்க அறிவித்தல்கள்

திருமண வினைமுறை ஒழுங்கீடு செய்வதற்கான தேவாலயம் பதிவு செய்தல்

விவாகப் பதிவுக் கட்டளைச் சட்டத்தின் (112 ஆம் அத்தியாயம்) 10 ஆம் பிரிவின் கீழ் இலங்கை பதிவாளர் நாயகம், ஏக்கநாயக்க முதியன்சேலாகே குணணசேகர ஆகிய நான் பொதுக் கிறிஸ்தவ வழிபாட்டுத் தேவாலயமாக உபயோகிக்கப்படும் பின்வரும் கட்டிடம் திருமண வினைமுறை ஒழுங்கீடு செய்யும் நோக்கங்களுக்காக முறைப்படி பதிவு செய்யப்பட்டுள்ளது என்பதை இத்தால் அறிவிக்கிறேன்.

இல.	*பதிவு செய்யப் படும் திகதி*	*விபரம்*	*இடம்*	*மதகுரு அல்லது சொந்தக்காரர் அல்லது நம்பிக்கைப் பொறுப்பாளர்*	*கட்டிடம் எந்த மதத்திற்காகப் பதிவு செய்யப்படுகிறதோ அந்த மதம்*
1405	2007.09.11	ஜெப இல்லம் தேவ ஆலயம்	கொழும்பு வடக்கு	பி. ஜ. பி. சில்வா	கிறிஸ்தவம்

ஈ. எம். குணசேகர,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் திணைக்களம்,
கொழும்பு.
2007, செத்தெம்பர் 27

10-572

திருமண வினைமுறை ஒழுங்கீடு செய்வதற்கான தேவாலயம் பதிவு செய்தல்

விவாகப் பதிவுக் கட்டளைச் சட்டத்தின் (112 ஆம் அத்தியாயம்) 10 ஆம் பிரிவின் கீழ் இலங்கை பதிவாளர் நாயகம், ஏக்கநாயக்க முதியன்சேலாகே குணசேகர ஆகிய நான் பொதுக் கிறிஸ்தவ வழிபாட்டுத் தேவாலயமாக உபயோகிக்கப்படும் பின்வரும் கட்டிடம் திருமண வினைமுறை ஒழுங்கீடு செய்யும் நோக்கங்களுக்காக முறைப்படி பதிவு செய்யப்பட்டுள்ளது என்பதை இத்தால் அறிவிக்கிறேன்.

இல.	*பதிவு செய்யப்படும் திகதி*	*விபரம்*	*இடம்*	*மதகுரு அல்லது சொந்தக்காரர் அல்லது நம்பிக்கைப் பொறுப்பாளர்*	*கட்டிடம் எந்த மதத்திற்காகப் பதிவு செய்யப்படுகிறதோ அந்த மதம்*
1406	2007.09.21	ஜீ வின்னப்ப அண்ட் மொறட்டுவ அப்போஸ்திக்க தேவாலய சபை	மொறட்டுவ	பேராயர் கே. ஜெகத் ஸ்ரான்லி பொன்சேகா	கிறிஸ்தவம் (றோமன் கத்தோலிக்கம் அல்லாத))

ஈ. எம். குணசேகர,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் திணைக்களம்,
கொழும்பு.
2007, ஒற்றோபர் 2.

10-678

வரவு செலவுத் திரட்டுக்கள்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை

2005, திசெம்பர் 31 ஆந் திகதி முடிவடைந்த ஆண்டுக்கான நிதிச்செயல் நிறைவேற்றுக்கூற்று

(இயல்புக்கேற்றவாறு செலவுகளை வகைப்படுத்திக்காட்டுகின்றது)

விபரம்	31.12.2005 முடிவடைந்த ஆண்டு தொகை	31.12.2004 முடிவடைந்த ஆண்டு தொகை
செயற்பாட்டு வருமானம் :		
மீண்டுவரும் மானியம்	391,000,000.00	288,000,000.00
தேறிய வருமானம் (நட்டம்)	6,961,135.89	3,443,351.76
இதர செயற்பாடுகளிலிருந்து இதர வருமானம்	7,360,000.60	7,422,283.50
	405,321,136.49	298,865,635.26
மாணவருக்கான நிதி உதவி	84,949,150.00	71,372,850.00
	490,270,286.49	370,238,485.26
செயற்பாட்டுச் செலவுகள் :		
ஆளணி ஊதியங்கள்	323,889,405.83	246,509,726.06
போக்குவரத்து	2,692,716.68	2,288,012.54
வழங்கல்களும் பயன்படுத்தப்பட்ட நுகர்பொருட்களும்	16,566,580.83	20,743,830.84
பராமரிப்பு	5,824,020.89	4,892,665.83
ஒப்பந்த சேவைகள்	20,033,478.39	17,633,272.92
ஆராச்சிகளும் அபிவிருத்திகளும்	575,518.05	592,967.17
தேய்மானத்திற்கும் கடன் தீர் நிதிக்குமான செலவுகள்	91,872,575.78	72,784,587.05
இதர செயற்பாட்டு செலவுகள்	9,672,087.79	7,244,833.85
மொத்த செயற்பாட்டுச் செலவுகள்	471,126,384.24	372,689,896.26
மொத்த செயற்பாட்டுச் செலவுகளிலிருந்து மிகை/குறை	19,143,902.25	(2,451,411.00)
மாணவருக்கான நிதி உதவி	84,949,150.00	71,372,850.00
மொத்த செயற்பாடுகளிலிருந்து மிகை/ குறை	(65,805,247.75)	(73,824,261.00)
அதிவிசேட இனங்கள் (பதிவழித்தலும் இதர சீராக்கலும்)	586,537.10	901,132.28
இக்காலத்திற்கான நிகர மிகை/குறை	(66,391,784.85)	(74,725,393.28)

பொதுக் காப்பொதுக்கத்திற்கு மாற்றப்பட்டது.

சரியென உறுதி செய்யப்பட்டது.

(பேராசிரியர்) சு. மோகனதாஸ்
கணக்கீட்டு அலுவலர்
துணைவேந்தர்

க. கனகரத்தினம்,
நிதியாளர்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை

2005 திசெம்பர் 31 ஆந் திகதியில் நிதி நிலைக் கூறு

விபரம்	*31.12.2005 தொகை*	*தொகை*	*31.12. 2004 தொகை*	*தொகை*
சொத்துக்கள்				
நடைமுறைசாரா சொத்துக்கள்				
ஆதனங்களும் சாதனங்களும் பொறித் தொகுதிகள்	466,197,156.79		252,173,702.33	
முதலீடுகள் (நீண்ட காலம்)	116,654,487.82		58,725,841.76	
நடைபெறும் மூலதன வேலை	200,470,031.30	783,321,675.91	211,748,796.53	522,648,340.62

	31.12.2005		31.12. 2004	
	தொகை	தொகை	தொகை	தொகை
நடைமுறைச் சொத்துக்கள்				
பொருட்பதிவேடுகள்/இருப்புகள்	5,734,621.78		6,471,798.39	
வியாபார மற்றும் வருமதிகள்	310,932,026.52		391.199,920.49	
முதலீடுகள் (குறுங்காலம்)	4,732,355.80		3,818,488.45	
உரொக்கமும் உரொக்கத்தின் மதிப்புள்ளமையும்	56,332,496.05	377,731,500.15	26,678,163.64	428,168,370.97
மொத்தச் சொத்துக்கள்:		1,161,053,176.06		950,816,711.59
பொறுப்புகள் :				
நடைமுறைப் பொறுப்புகள்				
கொடுக்கப்படவேண்டியவை	26,479,474.98		22,750,367.62	
அட்டுறு செலவுகள்	3,181,890.27		2,468,077.29	
சுயநிதியீட்டக் கற்கை நெறிகள்	18,716,302.51	48,377,667.76	11,520,795.02	36,739,239.93
நடைமுறை சாராப் பொறுப்புகள் :				
கொடுக்கப்படவேண்டியவை	3,414,334.24		3,027,969.09	
பணிக்கொடைக்கான காப்பொதுக்கங்கள்	86,400,033.59		83,387,838.71	
மட்டுப்படுத்தப்பட்ட நிதியம்	146,910,334.10	236,724,701.93	77,268,623.82	163,684,431.62
மொத்தப் பொறுப்புகள் :		285,102,369.69		200,423,671.55
தேறிய மொத்தச் சொத்துக்கள்		875,950,806.37		750,393,040.04
மொத்த தேறிய சொத்துக்கள்/சொந்த முதல்				
திரண்ட நிதியம் /(மூலதன மானியம்)	1,421,865,173.45		1,237,954,256.40	
ஒதுக்கம்:				
பொது ஒதுக்கம்	(654,187,177.23)		(580,557,543.63)	
பிணைக்கடப்பாட்டு ஒதுக்கம்	108,214,950.15		92,938,467.27	
மூலதன ஒதுக்கம்	57,860.00	875,950,806.37	57,860.00	750,393,040.04
மொத்த தேறிய சொத்துக்கள் /சொந்த முதல்		875,950,806.37		750,393,040.04
மொத்தப் பொறுப்புகள்		285,102,369.69		200,423,671.55
மொத்தப் பொறுப்புகள்/சொந்த முதல் (ஈடுபடுத்தப்பட்டுள்ள மொத்த நிதியங்கள்)		1,161,053,176.06		950,816,711.59

சரியென உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

(பேராசிரியர்) சு. மோகனதாஸ்
கணக்கீட்டு அலுவலர்
துணைவேந்தர்

க. கனகரத்தினம்,
நிதியாளர்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் 2005, திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான கணக்குகள் மீதான 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் அதிகாரச் சட்டத்தின் 108 (2) ஆம் பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் 2005, திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான கணக்குகளின் கணக்காய்வு 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் அதிகாரச் சட்டத்தின் 108(1) மற்றும் III ஆம் பிரிவுகளுடனும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் 13 ஆம் பிரிவுடனும் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியல் யாப்பின் 154 (1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளைப் பின் தொடர்ந்து எனது பணிப்புரையின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. நிதி அதிகாரச் சட்டத்தின் 13(7) (ஏ) பிரிவின் பிரகாரம் விரிவான அறிக்கையொன்று பல்கலைக்கழகத்தின் உபவேந்தருக்கு 2005, மே 19 அன்று அனுப்பிவைக்கப்பட்டது.

1.2 கணக்காய்வின் நோக்கெல்லை.-

இவ்வறிக்கையிலுள்ள கணக்காய்வு அபிப்பிராயம், கருத்துரைகள், கண்டுபிடிப்புகள் யாவும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் மீளாய்வினதும் கொடுக்கல் வாங்கல்களின் மாதிரிகளின் போதியளவு செவ்வைபார்த்தலின் அடிப்படையிலும் எழுந்தவையாகும். அவ்வாறான மீளாய்வினதும் செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் அளவும் எனக்குக் கிடைக்கப்பெற்ற மட்டுப்படுத்தப்பட்ட பதவியணியினர் மற்றைய வளங்கள், நேரம் என்பவற்றிற்கமைய எவ்வளவிற்கு விரிவுபடுத்த முடியுமோ அவ்வளவிற்கு விரிவுபடுத்திக் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. நிதிக் கூற்றுக்கள் குறிப்பிடக் கூடிய தவறான கூற்றுக்கள் அற்றவை என்பதை நியாயமாக உத்தரவாதப்படுத்துவதற்கு இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கும் வழிமுறைகளுக்கும் வழமைகளுக்கும் அமைவாக கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. கணக்காய்வானது நிதிக் கூற்றுக்களிலுள்ள தொகைகளையும் வெளிப்படுத்துகைகளையும் ஆதாரப்படுத்தும் சான்றுகளைப் பரிசோதனை செய்வதுடன் கணக்கீட்டுத் தத்துவங்களை மதிப்பீடுசெய்தல் நிதிக் கூற்றுக்கள் தயாரிப்பதில் செய்யப்படும் குறிப்பிடத்தக்க மதிப்பீடு செய்யப்பட்ட தீர்மானங்களும் அவற்றின் வெளிப்படுத்தல்கள் யாவற்றையும் மதிப்பாய்வு செய்வதுடன் கடைப்பிடிக்கப்பட்டுள்ள கணக்கீட்டுக் கொள்கைகள் முறையானதா தொடர்ச்சியாகப் பிரயோகிக்கப்பட்டு வெளிப்படுத்தப்பட்டுள்ளதா எனபவற்றைத் தீர்மானிப்பதையும் உள்ளடக்கியுள்ளது. 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) ஆம் (4) ஆம் உப பிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் அளவையும் தீர்மானிப்பதற்கு கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு தற்றுணிபு அதிகாரத்தை வழங்குகின்றன.

2. கணக்குகள்

2.1 கணக்காய்வு அபிப்பிராயம்

நிதிக் கூற்றுக்களில் எனது அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடயங்களின் தாக்கத்தைத் தவிர எனது பரிசோதனையிலிருந்தும் எனது சிறந்த தகவல்களின் அடிப்படையிலும் எனக்குத் தரப்பட்ட விளக்கத்தின் அடிப்படையிலும் நிதிக் கூற்றுக்கள் மற்றும் காசுப் பாய்ச்சல் கூற்று என்பன இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கும் நிதிக் கூற்றுக்களின் குறிப்பு இல 2 இல் குறிப்பிடப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளுக்கும் அமைவாக பல்கலைக்கழகத்தின் 2005, திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி நிலைமையையும் உண்மையாகவும் நியாயமாகவும் காட்டும் வண்ணம் தயாரிக்கப்பட்டுள்ளனவென்பது எனது அபிப்பிராயமாகும்.

2.2 கணக்குகள் மீதான கருத்துரைகள்

2. 2. 1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

கொடுக்கல் வாங்கல்களின் மாதிரிகள் மீதான பரீட்சார்த்த செவ்வை பார்த்தலில் செலவுத் தொகை ரூபா 25,018,388 தொடர்பில் கணக்காய்வில் அவதானிக்கப்பட்ட பதினெட்டு கணக்கீட்டுக் குறைபாடுகள் பல்கலைக்கழக உபவேந்தரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. எனவே, கணக்காய்விற்குட்படுத்தப்படாத பகுதிகளில் மேலும் இதே போன்ற கணக்கீட்டுக் குறைபாடுகள் ஏற்படக் கூடிய தன்மை இருக்க முடியாதென அறுதியிட்டுக் கூறமுடியாதுள்ளது.

2.2.2 பெறப்பட வேண்டிய செலுத்தப்படவேண்டிய கணக்குகள்

(அ) கடன்பட்டோர் மற்றும் கடன் கொடுத்தோர் தொகையாகிய முறையே ரூபா 341,525,924 மற்றும் ரூபா 29,659,510 தொடர்பாக உறுதிப்படுத்தல்கள் கோரப்பட்டிருக்கவில்லை.

(ஆ) கடன்பட்டோர் தொகை ரூபா 159,872,791 மற்றும் கடன் கொடுத்தோர் தொகை ரூபா 29,659,510 சம்பந்தமாக காலப் பகுப்பாய்வு தயாரித்துக் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

2.2.3 கணக்காய்விற்கான சான்றின்மை

ரூபா 1,202,689,282 பெறுமதியான சொத்துக்களையும் ரூபா 7,913,538 தொகையான செலவுகளையும் தேவையான சான்றுகளின்மையினால் திருப்திகரமாகச் சான்றுறுதிப்படுத்த முடியவில்லை.

2.2.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத் தீர்மானங்கள் என்பவற்றுடன் இணங்கியொழுகாமை

கீழே குறிப்பிடப்பட்ட சட்டங்கள், திறைசேரிச் சுற்றறிக்கைகள் மற்றும் அரசாங்க நிதிப் பிரமாணங்கள், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக் கோவை, பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மற்றும் உயர்கல்வி நிறுவனங்களின் தாபனவிதிக் கோவை என்பவற்றிலுள்ள பல ஏற்பாடுகளுக்கு இணங்கி இருக்காததுடன் இவ் இணங்காமை பல்கலைக்கழக உபவேந்தருக்கு வழங்கப்பட்ட எனது விரிவான அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

(அ) 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் xiv ஆம் பந்தியின் பிரிவுகள் 112, 113, 114, 115, 116, 117, 118 உம் மற்றும் உபபிரிவு 19 (எச்) உம்,

(ஆ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மற்றும் உயர்கல்வி நிறுவனங்களின் தாபன விதிக்கோவை :

அத்தியாயம் V இன் பிரிவு 7.6, 7.6.2 மற்றும் 7.8
அத்தியாயம் XV இன் பிரிவு 4
அத்தியாயம் XX இன் பிரிவு 3.1
அத்தியாயம் XXV இன் பிரிவு 2.2 (எப்)
அத்தியாயம் XXVI இன் பிரிவுகள் 2.4 மற்றும் 5
அத்தியாயம் XXVII இன் பிரிவு 9.4
அத்தியாயம் XXIV இன் பிரிவு 3.1
அத்தியாயம் XVII இன் பிரிவு 9.1
அத்தியாயம் III இன் பிரிவு 3
அத்தியாயம் XXX இன் பிரிவு 1.4.1

(இ) நிதிப்பிரமாணங்கள் :

இல 103 (i), 104, 109, 700 (5) மற்றும் 1646

(ஈ) திறைசேரிச் சுற்றறிக்கைகள் :

1979, யூலை 29 இன் இல. 828 2002, செத்தெம்பர் 30 இன் இல. 364 (3) மற்றும் 1976, யூலை 19 இன் இல. 828

(உ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு சுற்றறிக்கை :

1980, பெப்புருவரியின் 63 ஆம் இலக்கம் 1994, ஏப்பிறல் 20 இன் 30/94 ஆம் இலக்கம் மற்றும் 1997, ஒற்றோபர் 17 இன் 720 - (1) ஆம் இலக்கம்

3. நிதிசார் மற்றும் செயற்பாட்டு மீளாய்வு :

3.1 நிதிசார் மீளாய்வு :

3.1.1 நிதிசார் விளைவுகள் :

2005, திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான பல்கலைக்கழகத்தின் தொழிற்பாடு மீண்டுவரும் செலவிற்காகப் பெறப்பட்ட அரசாங்க மானியத்தைக் கணக்கிற்கு எடுக்குமுன் பற்றாக் குறையாக ரூபா 457,391,785 விளைந்திருந்ததுடன் ஒப்பிடும்போது நேரொப்பான முன்னைய ஆண்டில் பற்றாக்குறையாக ரூபா 362,725,393 விளைவித்திருந்தது. மீண்டுவரும் செலவிற்காகக் கிடைக்கப்பெற்ற அரசாங்க மானியமான ரூபா 391,000,000 ஐ கணக்கிற்கு எடுத்தபின் மீளாய்வாண்டிற்கான பற்றாக்குறை ரூபா 66,391,785 ஆல் குறைவடைந்திருந்ததுடன் முன்னைய ஆண்டிற்காக மீண்டுவரும் செலவிற்காகக் கிடைக்கப்பெற்ற அரசாங்க மானியமான ரூபா 288,000,000 அவ்வாண்டிற்கான பற்றாக்குறையை ரூபா 74,725,393 ஆகக் குறைந்திருந்தது.

3.1.2 குறித்தொதுக்கப்பட்ட நிதிகளின் செயற்பாடு :

குறிப்பிட்ட நோக்கங்களுக்காகப் பெறப்பட்ட மானியங்கள் மற்றும் அதன் மீதான வட்டித் தொகையாகிய ரூபா 29,063,670 அவை வழங்கப்பட்ட நோக்கங்களுக்காகப் பாவிக்கப்பட்டிருக்கவில்லை.

3.1.3 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள் :

பின்வரும் சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள் அவதானிக்கப்பட்டன :-

(அ) பல்கலைக்கழகத்தினால் 17 சுய நிதியளிப்பு பாடநெறிகள் நடாத்தப்படுகின்றன. எனினும், சுய நிதியளிப்பு பாடநெறிகளில் எதுவாகினும் குறிப்பிட்ட காலப்பகுதியில் பூரணப்படுத்தப்பட்டிருக்கவில்லை. 2003 ஆம் ஆண்டின் ஆரம்பிக்கபபட்ட குறிப்பிடப்பட்ட சில பாடநெறிகள் அவற்றின் காலப்பகுதி ஒருவருட காலமாக இருந்தபோதும் 2006, ஏப்பிறல் 31 வரை பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகளின்படி, இச்சுய நிதியளிப்பு பாடநெறிகளுக்காக ஒவ்வோர் மாணவரிடமிருந்தும் ரூபா 30,000 இலிருந்து ரூபா 50,000 வரை ரூபா 12,506,573 தொகை அறவிடப்பட்டிருந்ததுடன் விரிவுரையாளர்களுக்கு விரிவுரைக் கட்டணமாக ரூபா 5,545,437 செலுத்தப்பட்டிருந்தது. மேலும், ஒவ்வோர் சுய நிதியளிப்புப் பாடநெறிகளுக்குச் சேர்த்துக் கொள்ளப்பட்ட மாணவர்கள் எண்ணிக்கை சித்தியடைந்து வெளியேறிய மாணவர்கள் எண்ணிக்கை தொடர்பான தகவல்கள் கணக்காய்விற்குக் கிடைக்கப்பெறச் செய்யவில்லை.

(ஆ) இளைப்பாறிய விரிவுரையாளர்கள் ஒதுக்கீட்டு அடிப்படையில் வேலைக்கமர்த்தப்பட்டு சட்டங்கள், ஒழுங்கு விதிகளுக்கு முரணாக மாதாந்த அடிப்படையில் சம்பளங்கள் வழங்கப்பட்டு வருகின்றது. ஒதுக்கீட்டு அடிப்படையில் வேலைக்கமர்த்தப்பட்ட சில இளைப்பாறிய விரிவுரையாளர்கள் ஊழியர் சேமலாப நிதிக்கும் நன்கொடைக்கும் உரித்துடைமைக்காக தொழில் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்திருந்தனர். தொழில் நீதிமன்றம் ஒதுக்கீட்டு அடிப்படையில் வேலைக்கமர்த்தப்பட்ட இளைப்பாறிய விரிவுரையாளர்களுக்கு நன்கொடையும் பல்கலைக்கழக ஊழியர் சேமலாப நிதியும் வழங்கப்படவேண்டுமெனத் தீர்ப்பு வழங்கியுள்ளது. இதன் பயனாக ஒதுக்கீட்டு அடிப்படையில் வேலைக்கமர்த்தப்பட்ட இளைப்பாறிய விரிவுரையாளர்களுக்கு ரூபா 900,000 வரையான கடன் பொறுப்பிற்கு பல்கலைக்கழகம் பொறுப்பாளியாகவிருந்தது.

விரிவுரையாளர் ஒருவரின் சேவை எப்போதாவது எழும்போது வருகைதரும் அடிப்படையில் விரிவுரையாளர்களின் சேவையைப் பெற்றுக்கொள்வது மிகவும் சிக்கனமானதென கருத்தில் கொள்ளல் வேண்டும்.

(இ) பல்கலைக்கழகத்தின் பல்வேறு சேவை அலகுகளுக்கும் பீடங்களுக்கும் அறுபத்தொரு நேரடி தொலைபேசி தொடர்புகள் வழங்கப்பட்டிருந்ததுடன் நேரடி தொலைபேசி ஊடாக உள்ளகத் தொடர்பு சாதனத்தைப் பாவிக்காது உள்ளகத்தொடர்பாடலுக்கு பாவிக்கப்பட்டிருந்தது. இதன் பயனாக தொலைபேசிக் கட்டணமாக ரூபா 1,508,236 செலுத்தப்பட்டிருந்தது. உள்ளக தொடர்பாடல் சாதனங்களை முழு அளவில் பாவித்திருந்தால் இத்தொலைபேசிக் கட்டணத்தை ரூபா 452,471 இற்கு குறைத்திருக்கலாம்.

(ஈ) சம்பந்தப்பட்ட நாடுகளுக்கான நுழைவு அனுமதி (வீசா) பெறப்படமுன்பு சப்பாறீரிகல் விடுமுறையில் செல்லும் பல்கலைக்கழக பதவியணியினருக்கு விமானப் பயணக் கட்டணம் செலுத்தப்பட்டிருந்தது. சம்பந்தப்பட்ட நாடுகளுக்கு நுழைவு அனுமதி வழங்கப்படாமையினால் குறிப்பிட்ட சில பதவியணியினரால் இவ்வசதிகள் துஷ்பிரயோகம் செய்யப்பட்டிருந்தன.

3.1.4 இனங் காணப்பட்ட நாட்டங்கள் :

நிலையான சொத்துக்கள் களஞ்சியப் பொருட்கள் என்பவற்றின் இழப்பு மற்றும் பெறப்படவேண்டிய கடன்கள் தொகை ரூபா 586,537 மீளாய்வாண்டு காலத்தில் பதிவழிக்கப்பட்டிருந்தது.

3.1.5 செயற்திட்டத்தில் தாமதங்கள்
பின்வரும் அவதானிப்புகள் செய்யப்பட்டன :-

(அ) 1989 ஆம் ஆண்டளவில் முன்னர் உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்ட பல்வேறு செயற்திட்டங்களின் நிர்மாண வேலைகள் 2005, திசெம்பர் 31 வரையிலேனும் பூரணப்படுத்தபட்டிருக்கவில்லை.

(ஆ) மருத்துவ பீடத்தில் கேட்போர் கூடமொன்று நிர்மாணிப்பதற்கான 1999 இலிருந்து 2000 காலப் பகுதியில் நிர்மாண நிறுவனமொன்றிற்கு ரூபா 7,611,885 செலுத்தப்பட்டிருந்தது. எனினும் கட்டுமான வேலைகள் இன்னும் பூரணப்படுத்தப்படவில்லை. நீண்டகால தாமதத்தினால் கட்டுமானக் கிரயம் மிகவும் அதிகரித்திருக்கலாம். அத்துடன் இச்செயற்திட்டத்தின் நோக்கங்களும் அடையப்படவில்லை. மேலும் கேட்போர் கூடத்தில் உள்ளக அலங்கரிப்பிற்காக கட்டடத்திணைக்களத்திற்கு மீளாய்வாண்டு காலத்தில் ரூபா 6,000,000 செலுத்தப்பட்டிருந்தது.

(இ) பல்கலைக்கழக கட்டடத்தைப் பராமரிப்பதற்கு நேரடியாக ஈடுபட்டுள்ள ஊழியர்களுக்குச் செலுத்தப்பட்ட சம்பளத்திற்கும் கூலிகளுக்கும் மேலதிகமாக திருத்த வேலைகளுக்கான கட்டடப் பொருட்களுக்காக ரூபா 2,116,555 செலவு செய்யப்பட்டிருந்தது. மேலும், கட்டடப் பராமரிப்பிற்குப் பொறுப்பாக இருக்கும் பொறியியலாளரால் வருட முடிவில் கட்டடப் பொருட்கள் மற்றும் பொருத்திகளின் மீதிகள் இல்லையென அறிக்கையொன்று சமர்ப்பக்கப்பட்டிருந்த போதும் வருட முடிவில் பாவிக்கப்படாத கட்டடப் பொருட்களும் பொருத்திகளும் களஞ்சியத்தில் இருந்தன. எவ்வாறாயினும் பல்கலைக்கழக கட்டடங்கள் முறையாகப் பேணப்படாதிருந்தன.

(ஈ) விவசாய பீடத்திற்கு முழுமையாக மின்சாரத்தை வழங்குவதற்காக மின்சார சபைக்கு 2005, திசெம்பரில் ரூபா 2,607,050 செலுத்தப்பட்டிருந்தது. இச்செயற்திட்டம் 2006, ஏப்பிறல் 30 வரை ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) திருநெல்வேலியிலுள்ள மாணவர் விடுதிக்கான தண்ணீர் தாங்கி நிர்மாணிப்பதற்காக 1989 இல் கட்டிடத் திணைக்களத்திற்கு முற்பணமாக ரூபா 2,000,000 செலுத்தப்பட்டிருந்தது. எனினும் தண்ணீர் தாங்கி நிர்மாணம் இவ்வறிக்கைத் திகதிவரை பூர்த்தியாக்கப்பட்டிருக்கவில்லை. மேலும் எதுவித தகவல்களோ அல்லது இந்நிர்மாண வேலைகளின் விபரங்களோ கணக்காய்விற்குக் கிடைக்கப் பெறச்செய்யவில்லை.

(ஊ) முன் மொழியிடப்பட்ட பொறியியற் பீடத்தின் நிர்வாகச் செலவிற்காக வருடாந்த பாதீட்டில் ரூபா 986,552 ஒதுக்கப்பட்டிருந்தது. எனினும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் பொறியியற்பீடம் அமைக்கப்பட்டிருக்கவில்லை.

(எ) மாணவர் வழிகாட்டி வழங்குவதற்காக மாணவர் ஒருவரிடமிருந்து ரூபா 65 வீதம் ரூபா 535,540 அறவிடப்பட்டிருந்தது. எனினும் சம்பந்தப்பட்ட மாணவர்களுக்கு 2006, ஏப்பிறல் 30 வரை மாணவர் வழிகாட்டிகள் வழங்கப்பட்டிருக்கவில்லை.

3.2 செயற்பாட்டு மீளாய்வு

***3.2.1** கற்கை பதவியணியினர் நியமனம் .-*

பின்வரும் அவதானிப்புகள் செய்யப்பட்டன :-

(அ) பொதுவாக பல்கலைக்கழகத்தின் ஒவ்வோர் பீடத்திற்கும் நிலையான விரிவுரையாளர் பதவிகளுக்கு வெவ்வேறாக நியமனங்கள் செய்யப்பட்டிருக்கின்றன. இதன் பயனாக ஒரே துறையில் பல விரிவுரையாளர்கள் இருப்பது அவதானிக்கப்பட்டது. பல்வேறு பீடங்களில் நேர அட்டவணை தயாரிக்கும் போது நிலையான விரிவுரையாளரிகளின் ஏனைய இடங்களுக்குக் கிடைக்கக்கூடிய சேவைகள் கருத்தில் எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கவில்லை. ஏனைய பீடங்களுக்கு நிலையான விரிவுரையாளர்களின் சேவை தேவைப்படும் போது அவர்களுக்கு வருகைதரும் விரிவுரையாளர்களாக நியமனக் கடிதங்கள் வழங்கப்பட்டு அவ்வாறான சேவைக்கு மேலதிக விரிவுரைக் கட்டணங்கள் செலுத்தப்பட்டிருந்தன.

(ஆ) பல சந்தர்ப்பங்களில், முறையான ஆட்சேர்ப்பு நடைமுறைகள் பின்பற்றப்படாது பகுதித் தலைவர்களினால் மேற்கொள்ளப்படும் வேண்டுதல்கள் மீது தற்காலிக விரிவுரையாளர்கள், பயிற்றுவிப்பாளர்கள், செயல்விளக்கமளிப்போர் ஆகியோர் நியமிக்கப்பட்டிருந்தனர்.

(இ) பல்கலைக்கழக முறைமையில் தொழிலை எதிர்பார்க்கும் தகைமையுள்ளவர்களுக்கு போட்டியிடுவதற்குச் சந்தர்ப்பம் வழங்கப்படாது கற்கைநெறி பதவியணியினர் பதவிகள் வெற்றிடங்கள் முறையற்ற முறையில் நிரப்புவது பல்கலைக்கழகத்தின் வழமையான நடைமுறையாக இருக்கின்றது. இது எனது முன்னைய ஆண்டுகளுக்கான அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டிருந்த மேலும் இக்குறைபாடுகளை நிவர்த்தி செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) தங்களது சேவைகளுக்கு சமூகமளிக்காத சிரேஷ்ட விரிவுரையாளர்கள் தரம் I மற்றும் பயிற்றுனர் தரம் III ஆகியோர் 13 தொடக்கம் 18 வருட காலத்தின் பின் சேவையில் மீளவும் நியமிக்கப்பட்டதுடன் அவர்களின் சமூகமளிக்காத காலப்பகுதி விசேட விடுமுறையாக உரிய அதிகாரமின்றி அனுமதிக்கப்பட்டிருந்தது.

3.2.2 கற்கை நடவடிக்கைகள் :

பல்வேறு பீடங்களின் 5,367 மாணவர்களுக்காக விரிவுரைகள் நிகழ்த்தியதற்காக 429 விரிவுரையாளர்களுக்கு ரூபா 235,016,998 சம்பளமாகவும் படிகளாகவும் செலுத்தப்பட்டிருந்தது. எனினும் பின்வரும் ஒவ்வோர் பீடத்திலும் மாணவர்களின் எண்ணிக்கை, ஒவ்வோர் பீடத்திலும் ஒவ்வோர் விரிவுரையாளர்களும் நிகழ்த்திய விரிவுரைகள், விரிவுரையாற்றிய (பூரணப்படுத்திய) மணித்தியாலங்களின் எண்ணிக்கை, நடாத்தப்பட்ட பரீட்சைகளின் எண்ணிக்கை, சித்தியடைந்த மாணவர்களின் எண்ணிக்கை போன்றவை கற்கைநெறி பதவியணியினரின் நடவடிக்கையின், சிக்கனம், திறமை, தாக்கம் என்பவற்றை மதிப்பாய்வு செய்வதற்காக கணக்காய்விற்குக் கிடைக்கப்பெறச் செய்யவில்லை.

3.2.3 கற்கை நெறிகளும் பரீட்சைகளும் :

பின்வரும் அவதானிப்புகள் செய்யப்பட்டன:-

(அ) பல்கலைக்கழகத்தின் 10 பாடநெறிகளுக்குமாக மொத்தமாக 5,367 மாணவர்கள் பதிவு செய்யப்பட்டிருந்தனர். மீளாய்வாண்டு காலத்தில் செலவு செய்யப்பட்ட மீண்டுவரும் செலவு ரூபா 263,801,236 ஆகும். ஒரு மாணவருக்கான சராசரி மீண்டுவரும் செலவு ரூபா 510,923 ஆக இருந்தது.

(ஆ) பல்கலைக்கழகத்தின் ஒவ்வோர் பீடத்தின் கீழ் நடாத்தப்பட்ட பல்வேறு பாடநெறிகளுக்கான பரீட்சைகள் நடாத்தும் திகதிகள் பரீட்சைகளின் பெறுபேறுகள் வெளியிடும் திகதிகளின் எல்லைகள் தீர்மானிக்கப்பட்டிருக்கவில்லை. 2004 மற்றும் 2005 ஆம் ஆண்டுகாலப் பகுதியில் குறிப்பிட்ட பீடங்களினால் நடாத்தப்பட்ட பரீடசைகளின் பலாபலன்களை வெளியிடுவதில் குறிப்பிடக்கூடிய காலதாமதம் ஏற்பட்டிருந்தமை மேலும் அவதானிக்கப்பட்டது. 1995, யூலை 14 இன் 636 ஆம் இலக்க பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுச் சுற்றறிக்கையின்படி பரீட்சையின்பின் மூன்று மாதகாலத்திற்குள் பெறுபேறுகள் வெளியிடப்படுதல் வேண்டும். ஆனால் பெறுபேறுகள் 6 தொடக்கம் 12 மாதகாலங்கள் வரையான காலதாமதத்தின் பின் வெளியிடப்பட்டிருந்தன.

3.2.4 பட்டப் பின் படிப்புக் கற்கைகளுக்காகச் சம்பளத்துடன் மற்றும் சம்பளமற்ற விடுமுறை வழங்கல் :

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன :-

(i) படிப்பிற்காக வெளிநாட்டிற்குச் சென்ற விரிவுரையாளர்களுக்கு, பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மற்றும் உயர் கல்வி நிறுவனங்களுக்கான தாபன விதிக் கோவையில் 10 ஆம் அதிகாரத்தின் 27.4 ஆம் பிரிவிலுள்ள அறிவுறுத்துரைகளைக் கருத்திற் கொள்ளாது ஒருவருட காலத்திற்கு மேலாக விடுமுறை வழங்கப்பட்டிருந்தது.

(ii) தகுதிகாண் நிலையிலிருந்த விரிவுரையாளர்களுக்கு படிப்பு விடுமுறை அனுமதிக்கப்பட்ட சந்தர்ப்பங்களுமிருந்தன.

3.3 ***பாதீட்டுக் கட்டுப்பாடு :***

பாதீட்டிற்கும் உண்மையானவற்றிற்குமிடையே பாரிய வேறுபாடுகள் அவதானிக்கப்பட்டமையானது பாதீடு ஓர் தாக்கமுள்ள முகாமைக் கட்டுப்பாட்டுக் கருவியாகப் பாவிக்கப்படாமையைச் சுட்டிக் காட்டுகின்றன.

4. முறைமைகளும் கட்டுப்பாடுகளும் :

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட குறைபாடுகள் பல்கலைக்கழகத்தின் உபவேந்தரின் கவனத்திற்கு நிதி அதிகாரச் சட்டத்தின் 13 (7) (அ) பிரிவின் பிரகாரம் எனது விரிவான அறிக்கையொன்றின் மூலம் கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாடுகள் சம்பந்தமாக விசேட கவனம் தேவைப்படுகின்றது :-

(அ) ஆளணி முகாமைத்துவம்
(ஆ) பாதீடு
(இ) கொள்வனவுகள்
(ஈ) களஞ்சியங்கள்
(உ) கடன்பட்டோர்
(ஊ) ஒப்பந்த நிர்வாகம்
(எ) நூலக நிர்வாகம்
(ஏ) உள்ளகக் கணக்காய்வு

எஸ். சீ. மாயாதுன்னே,
கணக்காய்வாளர் தலைமை அதிபதி

கணக்காய்வு அபிப்பிராயம்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் 2005, திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான கணக்குகள் மீதான கணக்காய்வு 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் அதிகாரச் சட்டத்தின் 108 (1) மற்றும் 111 ஆம் பிரிவுகளுடனும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3), (4) மற்றும் (7) ஆம் உப பிரிவுடனும் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியல் யாப்பின் 154(1) ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகளைப் பின் தொடர்ந்து எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது.

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடயங்களினால் நிதிசார் கூற்றுக்களில் ஏற்படும் தாக்கங்களைத் தவிர, எனது பரிசோதனைகளிலிருந்து தெரிவதும், எனது சிறந்த தகவல்களுக்கும், எனக்களிக்கப்பட்ட விளக்கங்களுக்கும் இணங்க நிதிக் கூற்றுக்களானவை, இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கும், நிதிக் கூற்றுக்களின் குறிப்புகளில் (இல. 2) சொல்லப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளுக்கும் அமையவும் 2005, திசெம்பர் 31 ஆந் திகதியிலுள்ள பல்கலைக்கழகத்தின் நிதி நிலைமையையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிசார் விளைவுகளையும் காசோட்டத்தையும் உண்மையாகவும் நேர்மையாகவும் காட்டும் வண்ணம் தயாரித்துச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததென நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

கணக்காய்வில் எழுந்த கருத்துரைகளும் அவதானிப்புக்களும் பல்கலைக்கழக உபவேந்தருக்கு முகவரியிடப்பட்ட சமதிகதி கொண்ட எனது அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

(எஸ். சீ. மாயாதுன்னே)
கணக்காய்வாளர் தலைமை அதிபதி.

2006, யூலை 31 ஆந் திகதி ,
கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்,
கொழும்பு 07.

31.12.2005 இல் முடிவடைந்த ஆண்டுக்கான யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் கணக்குகள் மீது கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கையின் மீது யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஆளுனர் சபையின் அவதானிப்புகள்

2:2:2 (அ) பெரும்பாலான தொகைகள் ஊழியர்களுக்கான கடன்களையும் முற்பணங்களையும் மற்றும் மாணவர்களது வைப்புப் பணங்களையும் ஊழியர்களது பாதுகாப்பு வைப்புப் பணங்களையும் கொண்டுள்ளமையால் அவற்றை உறுதிப்படுத்துதல் அவசியமற்றது.

(ஆ) கணக்காய்வாளர் அறிக்கையில் கூறப்பட்டுள்ள ரூபா 189,532,301 கான விபரங்கள் கொடுக்கப்படாமையால் அதுபற்றி எமது அபிப்பிராயத்தை கூறமுடியாதுள்ளது. கடன்கள் முற்பணங்கள் மற்றும் வழங்குனர்களுக்கான முற்பணங்கள் ஆகியவற்றின் வயதுப் பகுப்பாய்வு கொடுக்கப்பட்டுள்ளது.

2:2:3 கணக்காய்வாளர் அறிக்கையில் ரூபா 1,210,602,820 கான விபரங்கள் கொடுக்கப்படாமையால் அதுபற்றிய அபிப்பிராயத்தை கூறமுடியாதுள்ளது.

2:2:4 பல்கலைக்கழகமானது பல்கலைக்கழகங்கள் சட்டம், தாபனக் கோவை மற்றும் சுற்றறிக்கைகளில் கூறப்பட்டுள்ள விடயங்களை முடிந்தவரையில் அமுல்படுத்துகின்றது.

3:1:3 (அ) பட்டப்படிப்புகள் பீடத்தினால் 2005 ஆம் ஆண்டில் பத்துப்பிரிவு மாணவர்களுக்கு ஐந்து வெவ்வேறு சுயநிதியீட்டுக் கற்கைநெறிகள் நடாத்தப்பட்டன (அவற்றில் சில இரண்டு வருடங்களையும் சில இரண்டு நிலையங்களிலும் நடாத்தப்பட்டன.) இரண்டாம் பரீட்சகர்கள் பலர் வெளியாட்களாக இருந்தமையால் விடைத்தாள்களை திருத்திப் பெற்றுக்கொள்வதில் காலதாமதம் ஏற்பட்டது. இதைவிட பல்கலைக்கழகத்திற்குள்ளும் வெளியிலும் காணப்பட்ட சூழலும் காலதாமதத்திற்கு காரணமாக அமைந்தது. தற்பொழுது இக் கற்கைநெறிகளை உரிய காலத்திற்குள் நடாத்தி முடிப்பதற்குரிய நடவடிக்கைகள் எம்மால் எடுக்கப்பட்டுள்ளது.

பட்டப்படிப்புகள் பீடத்தினால் நடாத்தப்படும் கற்கைநெறிகள் மிகவும் பிரபல்யமானவையாக இருப்பதுடன் அவை மாணவர்களது உயர்விற்கும் சமூகத்திற்கு நல்ல சேவை வழங்குவதற்கும் பிரயோசனமானவையாகும். மேலும் பல்கலைக்கழகத்தின் மூல நோக்கங்களில் ஒன்றை அடைவதற்கு இக் கற்கைநெறிகள் சந்தர்ப்பத்தை வழங்குகின்றன.

பட்டப்படிப்புகள் பீடம் விரிவுரைகளை வார இறுதி நாட்களிலும் வேலை நோக்கத்திற்குப் பின்னரும் நடாத்துகின்றது. இந்த ஏற்பாடானது பல்கலைக்கழகத்தின் வழமையான செயற்பாடுகளை பாதிப்படையச் செய்யவில்லை.

(ஆ) பத்திரிகை விளம்பரங்கள் ஊடாக பல தடவைகள் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்ட போதும் சிரேஸ்ட நிலையில் உரிய கல்வித் தகமைகளுடன் ஆளணியினரை பெற்றுக்கொள்ள முடியவில்லை. கல்வி செயற்பாடுகளை தடையின்றி நடாத்துவதற்கு இளைப்பாறிய கல்விமான்களை பணிக்கு அமர்த்தவேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. பல்கலைக்கழக பேரவையினால் சிபார்சு செய்யப்பட்டு அமைச்சரவையின் அங்கீகாரம் பெற்றுக் கொள்வதற்கு பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு ஊடாக உரிய பத்திரங்கள் அனுப்பப்பட்ட போதும் எதுவித பதிலும் கிடைக்கவில்லை. கற்கை செயற்பாடுகளை மேற்கொள்ளுவதற்காக பேரவை பேராசிரியர் வி. தர்மரத்தினத்தின் சேவை ஒப்படைக்கப்பட்ட பணி நிறைவேற்றுதல் என்ற அடிப்படையில் பெற்றுக்கொள்ளப்பட்டது பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு கணிதத்துறையில் சிரேஷ்ட கல்விமான்களின் பற்றாக்குறையை கவனத்திற்கெடுத்து ஒப்படைக்கப்பட்ட பணி நிறைவேற்றுதல் என்ற அடிப்படையில் அவரது சேவையை பெற்றுக் கொள்வதற்கு அனுமதி வழங்கியது.

கணக்காய்வாளரின் அறிக்கை பிரிவு 3:1:3 (அ) இல் கூறப்பட்ட மூன்று ஆசிரியர்களும் 2005 இற்கு முன்னைய ஆண்டுகளில் பணிக்கு அமர்த்தப்பட்டவர்கள் ஆவர்.

சில கற்கை நெறிகளில் தகுதியான ஆசிரியர்கள் இல்லாத சந்தர்ப்பங்களிலும் வெற்றிடங்களை நிரப்புவதற்குத் தேவையான விண்ணப்பங்கள் கிடைக்காத போதும் இளைப்பாறிய ஆசிரியர்களை பணிக்கு அமர்த்துவதற்குத் தவிர வேறு மாற்று வழி எதுவும் இல்லை.

சில கற்கைப் பகுதிகளில் 50% இற்கு மேலானசிரேஷ்ட ஆளனியினர்கள் நிரப்பப்படாமல் உள்ளனர். அத்தகைய பகுதிகளில் வெளியாட்களையோ அல்லது ஓய்வுபெற்ற பல்கலைக்கழக ஆசிரியர்களையோ வருகை விரிவுரையாளர்கள் என்ற அடிப்படையில் பணிக்கு அமர்த்துதல் மட்டும் போதுமானதல்ல. விரிவுரைகள் எடுப்பதோடு மட்டுமன்றி மாணவர்களது ஒப்படைகளுக்கு வழிகாட்டுவதற்கும் அவற்றை மேற்பார்வை செய்வதற்கும் மற்றும் தொடர் மதிப்பீடுகளிற்கும் சிரேஷ்ட ஆளணியினர்கள் தேவைப்படுகின்றனர். ஆசிரியர்கள் (ஒப்பந்த அடிப்படையில்) மருத்துவ பீடம் மற்றும் விஞ்ஞான பீடங்களில் காணப்படும் சிரேஷ்ட கல்விமான்களின் வெற்றிடங்களிற்கு நியமிக்கப்படுகின்றனர். ஒப்படைக்கப்பட்ட பணிநிறைவேற்றுதல் என்ற அடிப்படையில் ஆசிரியர்கள் நியமனம் செய்யப்படும்போதும் அப்பதவிகளுக்கான அடிப்படைச் சம்பளத்தை அவர் இளைப்பாறும் நேரத்தில் காணப்பட்டவாறு கவனத்திற்கெடுத்து அவர்கள் நிலையான சம்பளத்தில் பணிக்கு அமர்த்தப்படுகின்றனர்.

வருகை அடிப்படையில் ஆசிரியர்களது சேவையை பெற்றுக்கொள்ளுதல் சிக்கனமாக காணப்பட்டபோதும் மேலே விளங்கப்படுத்தியவாறு ஆளணியினர் மிகப்பற்றாக்குறையாகக் காணப்படும் கற்கைத் துறைகளுக்கு அவ்வாறான நியமனங்களினால் மட்டும் தேவையைப் பூர்த்தி செய்து கொள்ளமுடியாது.

(இ) தொலைபேசி சேவையைப் பெற்றுக் கொள்வதற்கு தகுதியுடைய உத்தியோகத்தர்களில் மட்டுப்படுத்தப்பட்ட எண்ணிக்கை உடைய உத்தியோகத்தர்களுக்கு மட்டுமே தொலைபேசி வசதி வழங்கப்பட்டுள்ளது.

தற்போதுள்ள உள்ளகத் தொலைபேசியானது (PABX System) இருபத்தைந்து வருடங்களுக்கு முன்னர் பொருத்தப்பட்டது அது தற்சமயம் வழக்கொழிந்து செயற்பாடற்ற நிலையில் காணப்படுகின்றது. இதனைத் திருத்துவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டபோதும் அவை பயனளிக்கவில்லை. ஸ்ரீலங்கா ரெலிக்கோம்மின் யாழ். கிளையினர் இதனைப் பரீட்சித்து இதனைத் திருத்திக்கொள்ள முடியாதென அறிவித்துள்ளனர்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழத்திற்கு உள்ளகத் தொலைபேசியொன்றை வழங்குவதற்கும் பொருத்துவதற்கும் செயற்பட வைப்பதற்குமாக ஆலோசனைச் சேவைக்கான கேள்விப்பத்திரம் 2003 ஆம் ஆண்டு பெற்றுக் கொள்ளப்பட்டது. ஏனைய பல்கலைக்கழகங்களில் காணப்படுகின்ற உள்ளகத் தொலைபேசி மற்றும் வலைப்பின்னல் முறையை அறிந்து கொள்ளும்

பொருட்டு ஆலோசனைக்கான கேள்விப்பத்திரத்தை நிறுத்தி வைப்பதற்கு 26.07.2003 இல் நடைபெற்ற 277 வது பல்கலைக்கழக பேரவைக்கூட்டத்தில் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டது. மேலும் சீடா செயற்திட்டத்தின் கீழ் விஞ்ஞான பீடத்தினால் எல்லாத்துறைகளிற்கும் கிளைகளிற்கும் வலைப்பின்னல் முறை மூலம் உள்ளகத் தொடர்பை ஏற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. இச் செயற்பாடு நிறைவுற்றதும் தொலைபேசிக்கட்டணங்கள் குறைக்கப்படும்.

(ஈ) எமது நாட்டில் காணப்படும் சூழல் காரணமாக போக்குவரத்து தொடர்பு ஆகியன அடிக்கடி பாதிப்புக்குள்ளாகின்றன. வெளிநாட்டுப் பயணங்களை மேற்கொள்ள வேண்டிய உத்தியோகத்தர்கள் அதற்கான ஒழுங்குகளை மிகக் குறுகிய காலத்தில் மேற்கொள்ள வேண்டி இருக்கின்றது. உத்தியோகத்தர்களினால் எதிர்நோக்கப்படுகின்ற சிரமங்களை கவனத்திற்கெடுத்து விசா வழங்கப்படுவதற்கு முன்னராக விமானச் சீட்டிற்கான கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டது. எனினும் விசா வழங்கப்பட்டமையை உறுதிப்படுத்தியதன் பின்னரே விமானப் பயணத்திற்கான கொடுப்பனவை மேற்கொள்ளுவதற்கு தற்சமயம் பல்கலைக்கழகம் தீர்மானித்துள்ளது.

3:1:5 (அ) 1989 ஆம் ஆண்டிற்கு முன்னர் செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்தவேலைகள் எவையும் பூர்த்தி அடையாத நிலையில் இல்லை எனினும் கலைப்பீட மற்றும் இராமநாதன் அக்கடமியின் நுண்கலை ஆகிய கட்டடங்கள் 1989 இற்கு முன்னர் தொடங்கப்பட்ட பொழுதும் பூர்த்தியாகாத நிலையில் காணப்படுகின்றன. இவை மிகப்பெரிய செயற்திட்டங்களாகவிருந்தமையால் அவற்றை கட்டிடத்திணைக்களத்திற்கு பல கட்டங்களாக வழங்கப்பட்டன, அவற்றில் பூர்த்தியான பகுதிகள் பயன்படுத்தப்படுகின்றன. 1990 இல் இருந்து 1996 வரை வடபகுதிக்கு கட்டடப் பொருட்கள் முற்றாக தடைசெய்யப்பட்டிருந்ததுடன் 2002 சித்திரை மாதம் ஏ – 09 பாதை திறக்கப்படும்வரை இது சாத்தியப்படவில்லை.

(ஆ) ரூபா 7,611,885 கட்டம் ஒன்றின் பூர்த்தியாகாத வேலைகளை செய்து முடிப்பதற்காக கொடுக்கப்பட்டது இதில் கூரையிடல், அழகுபடுத்தல், பூரணப்படுத்தல் ஆகிய வேலைகள் அடங்கவில்லை. உள்ளக அழகுபடுத்தல் வேலைக்கான பத்திரங்கள் தயாரிக்கப்பட்டு மூன்று தடவை கேள்விப்பத்திரங்கள் அழைக்கப்பட்டன. எனினும் பல்கலைக்கழக கேள்விச் சபை ஒரு பூரணமான ஒப்பந்தகாரரை சிபார்சு செய்ய முடியவில்லை. இறுதியாக இவ்வேலையை கட்டடங்கள் திணைக்களத்திடம் ஒப்படைப்பதற்கு பல்கலைக்கழகப் பேரவை முடிவு செய்தது.

(இ) பராமரிப்புக் கிளையில் பராமரிப்புக் களஞ்சியமோ அல்லது களஞ்சியக் காப்பாளரோ இல்லை நிதிப்பிரிவிலிருந்து பெற்றுக் கொள்ளப்படும். களஞ்சியப் பொருட்கள் பதிவு செய்யப்பட்டு அவை வேலைகளுக்காக வழங்கப்படுகின்றன. வேலைகளுக்காக பொருட்கள் வழங்கப்பட்டதும் மீதிப் பொருட்கள் எவையும் இல்லையென்று கருதிக் கொள்ளப்படுகின்றது. பராமரிப்புக்கிளை வருட இறுதியில் மூடப்படாமையாலும் தொடர்வேலை காணப்பட்டமையாலும் நடைபெறும் வேலைக்குரிய பொருட்கள் வேலைத்தளத்தில் காணப்பட்டிருக்கலாம் சில வேலைகள் பல நாட்கள் தொடர்கின்றன. கணக்காய்வாளரால் குறிப்பிடப்பட்ட ரூபா 2,116,555 கட்டடங்கள் ஏனைய வேலைகள் ஆகியவற்றின் திருத்தங்களிற்கு உரியதாகும்.

(ஈ) நெகோட் நிதியீட்டத்தின் கீழ் பொன்னகர், கிளிநொச்சியில் 2005 செப்ரம்பரில் ஆரம்பிக்கப்பட்ட விவசாய பீட கட்டடவேலை தற்சமயம் அட்டவணையின் பிரகாரம் நடைபெறவில்லை.

(உ) கட்டடத்திணைக்களத்தினால் இவ்வேலையானது 1990 ஆம் ஆண்டு யுத்த சூழல் காரணமாக நிறுத்தப்பட்டது. பின்னர் 1999 இல் இரண்டு கிணறுகளும் நீர் இறைக்கும் இயந்திரக்கட்டடமும் பூர்த்தியாக்கப்பட்டன. நீர்த்தாங்கியின் வேலையை பூர்த்தி செய்யுமாறு கட்டடத்திணைக்களத்திற்கு நினைவூட்டல் கடிதம் அனுப்பப்பட்டுள்ளது.

(ஊ) யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் பொறியியல் பீடத்திற்கான அங்கீகரிக்கப்பட்ட ஆளணியினருக்கு இந்த நிதி ஒதுக்கீடு மேற்கொள்ளப்பட்டது. பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவினால் கட்டடத்திற்கான நிதி எதுவும் ஒதுக்கப்படவில்லை பொறியியல் பீடமொன்றை நிறுவுவதற்கான வர்த்தமானி அறிவித்தலை அரசாங்கம் வெளியிடவில்லை.

(எ) உரிய பீடங்களினால் மாணவர்களுக்கான வழிகாட்டி நூலை வழங்குவதற்கு ஏற்கனவே உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. பலபீடங்கள் மாணவர் கைநூலை வெளியிட்டுள்ளன.

3:2:1 (அ) பல்கலைக்கழகத்தின் நிரந்தரமான ஆசிரியர்கள் தமது சம்பளத்தைத் தவிர வேறு எவ்வித கொடுப்பனவுமின்றி தமது பீடங்களினதும் ஏனைய பீடங்களினதும் கற்கை செயற்பாடுகளை மேற்கொண்டு வருகின்றனர். ஆசிரியர் ஒருவரின் கற்கைப் பணியானது அவரது கற்கைத்துறையில் அல்லது பீடத்தில் அங்கீகரிக்கப்பட்ட நியமத்திலும் பார்க்க கூடுதலாக காணப்படுமிடத்து அவர் ஏனைய கற்கைத்துறையொன்றில் அல்லது பீடமொன்றில் கற்பிக்கப்படவேண்டிய நிலை ஏற்படுமிடத்து மட்டுமே வருகை விரிவுரையாளர் அடிப்படையில் கொடுப்பனவு வழங்கப்படுகின்றது. தவிர்க்க முடியாத சந்தர்ப்பத்தில் மட்டுமே சிறு எண்ணிக்கைகளை உடைய வருகை நியமனங்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் ஒவ்வொரு பீடத்தின் தேவையைக் கருத்திற்கொண்டு ஆளணியினரின் எண்ணிக்கை தீர்மானிக்கப்படுகின்றது. கற்கைத்துறையில் தலைப்பு ஒரே மாதிரியாகக் காணப்பட்டபோதும் அதன் பரப்பளவு, கற்கைநெறியின் உள்ளடக்கம் ஆகியவை மாற்றமடையலாம். உதாரணமாக விஞ்ஞான பீடத்தில் கற்பிக்கப்படும் பௌதீகம், இரசாயனம், கணிதம் ஆகியவை பொறியியல் பீடத்தில் கற்பிக்கப்படுகின்ற முறையிலிருந்து வேறுபடுகின்றது.

ஆ. உதவி விரிவுரையாளர்களுக்கு போதனாசிரியர்களுக்கு, செய்முறைப் பயிற்சியாளர்களுக்கான தற்காலிக நியமனங்கள் கற்கை ஆண்டு தொடங்குவதற்கு முன்னராக விளம்பரப்படுத்தப்பட்டு அவை உரிய ஆட்சேர்ப்புத் திட்டத்திற்கு அமைவாக

மேற்கொள்ளப்படுகின்றன. எனினும் அவ்வாறு நியமிக்கப்பட்டவர் சேவையிலிருந்து விலகுமிடத்து அதனால் ஏற்படும் வெற்றிடத்தை விளம்பரம் மூலம் மேற்கொள்வதற்கு போதிய கால அவகாசம் காணப்படாதவிடத்து பீடாதிபதியினதும் துறைத்தலைவரதும் வேண்டுகோளுக்கமைவாக குறிப்பிட்ட கற்கை அட்டவணைக்கு அமைவாக கற்கை செயற்பாடுகளை தொடர்வதற்காக சில சந்தர்ப்பங்களில் மட்டும் அவ்வாறான நியமனங்கள் மேற்கொள்ளப்படுகின்றன. அத்தகைய நியமனங்கள் இராஜினாமா செய்தவரின் மிகுதிக்காலப் பகுதிக்கு மட்டுமே வழங்கப்படுகின்றது.

(இ) சிரேஷ்ட கல்விமான்களின் சேவையை ஒப்பந்த அடிப்படையில் அல்லது ஒப்படைக்கப்பட்ட பணி நிறைவேற்றுதல் என்ற அடிப்படையில் பெற்றுக்கொள்ளப்படும் சந்தர்ப்பங்கள் தவிர்ந்த ஏனைய சந்தர்ப்பங்களில் தகுதியானவர்களுக்கு சந்தர்ப்பம் அளிக்காமல் எவ்வித நியமனங்களும் மேற் கொள்ளப்படவில்லை. எல்லா வெற்றிடங்களும் ஒழுஜ்காக விளம்பரப்படுத்தப்பட்டு ஆட்சேர்ப்புத் திட்டத்திற்கு அமைவாக தகுதியான விண்ணப்பதாரர்கள் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டு சட்டப்படி அமைக்கப்பட்ட தெரிவுச் சபையால் அவை மதிப்பீடு செய்யப்படுகின்றன.தெரிவுச் சபையின் சிபார்சுக்கு அமைவாக நியமனங்கள் செய்யப்படுவதால் தகுதியான விண்ணப்பதாரர்களுக்கு சந்தர்ப்பங்கள் வழங்கப்படுகின்றன.

(ஈ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் 14.07.1993 இல் வெளியிடப்பட்ட 13/1993 ஆம் சுற்றறிக்கையினால் நடைமுறைக்கு கொண்டுவரப்பட்ட 04. 06. 1993 ஆந் திகதியைக் கொண்ட 11/1993 இலக்கமுடைய பொது நிர்வாக அமைச்சின் சுற்றறிக்கைக்கு அமைவாக இரு உத்தியோகத்தர்களும் மீண்டும் பணிக்கு சேர்த்துக் கொள்ளப்பட்டனர்.

3:2:2 கேட்கப்பட்ட தகவல்கள் எதிர்காலத்தில் சமர்ப்பிக்கப்படும்.

32:3 (ஆ) சில பீடங்களில் பரீட்சைகள் கல்வியாண்டு முடிவில் நடாத்தப்படுகின்றன. இன்னும் சிலவற்றில் ஒவ்வொரு அரையாண்டு முடிவிலும் நடாத்தப்படுகின்றன. எனினும் முதல் அரையாண்டு கால முடிவில் நடாத்தப்பட்ட பரீட்சையின் பெறுபேறுகள் இரண்டாம் அரையாண்டு பரீட்சை முடிவுடன் சேர்த்து வெளியிடப்படுகின்றன. இதுவே பரீட்சை ஒழுங்கு விதிகளாகும். இம்முறை பின்பற்றப்படுவதற்கான காரணம் ஒவ்வொரு அரையாண்டு முடிவிலும் பரீட்சை பெறுபேறுகள் வெளியிடப்படுமாயின் மாணவர்கள் ஐந்து கற்கை அலகுகளில் இரண்டு கற்கை அலகுகளை இரண்டாவது அரையாண்டில் தவறவிடக்கூடும். எனினும் தற்பொழுது பட்டப்படிப்பின் அமைப்பு முறை மாற்றப்படுவதால் புதிய பிரிவு மாணவர்களில் இருந்து பரீட்சை நடைபெற்று மூன்று மாதங்களுக்குள் பரீட்சைப் பெறுபேறுகள் வெளியிடப்படும்.

3:2:4 (அ) மற்றும் (ஆ) : பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினதும் உயர்கல்வி நிறுவனங்களினும் தாபனக் கோவையில் குறிப்பிடப்பட்டுள்ள இப்பிரிவானது 02. 03. 1990 ஆந் திகதியைக் கொண்ட 429 ஆம் இலக்க பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவின் சுற்றறிக்கை மூலம் ஆசிரியர்களுக்கான கற்கை லீவின் காலத்தை தீர்மானம் செய்யும் அதிகாரம் அந்தந்தப் பல்கலைக்கழகங்களின் பேரவைகளுக்கு வழங்கப்பட்டுள்ளது.

3:3 பாதீட்டுக்கட்டுப்பாடு தொடர்பாக பின்வரும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன :-

1. பாதீடானது நிதிக்குழுவினாலும் பேரவையினாலும் வருடந்தோறும் அங்கீகரிக்கப்படுகிறது.
2. ஒவ்வொரு செலவினங்களுக்கும் ஒதுக்கப்பட்ட தொகைக்கும் செலவுகள் செய்யப்படுவதை உறுதிப்படுத்திக்கொள்ளும் நோக்குடன் வாக்குப் பண ஏடு கணனிமயப்படுத்தப்பட்டுள்ளது.
3. மாதந்தோறும் பாதீட்டிற்கு உண்மையான செலவினத்திற்குமான கணக்கறிக்கை நிதிக்குழுவிற்கு சமர்ப்பிக்கப்படுகிறது.
4. பல்கலைக்கழகத்தின் நிதிப்பிரிவினால் வவுனியா வளாகத்திற்கு வழங்கப்படும் உப கட்டு நிதியை கண்காணிப்பதன் நோக்குடன் தனியாக வாக்குப்பண ஏடு பராமரிக்கப்படுகிறது.

4:0 (அ) கணக்காய்வாளர் அறிக்கையில் கூறப்பட்டுள்ள விடயங்கள் தொடர்பாக நல்ல கட்டுப்பாட்டையும் நடைமுறையையும் பின்பற்றும் நோக்குடன் பின்வரும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

(ஆ) கொள்வனவும் களஞ்சியக்கட்டுப்பாடும்

கொள்வனவு நல்ல காத்திரமான நடைமுறை கொள்வனவு தொடர்பாக பின்பற்றப்படுகின்றது. பின்வரும் நடைமுறைகள் கடைப்பிடிக்கப்படுகின்றது.

1. ரூபா 200,000 மேற்பட்ட கொள்வனவுகள் கொள்வனவுக் குழுவால் அங்கீகரிக்கப்படுகின்றது.
2. கூறுவிலை கேள்விப்பத்திர நடைமுறை ஆகியவை பொருட்களின் பெறுமதியை பொறுத்து பின்பற்றப்படுகின்றன.
3. தேவைப்படுமிடத்து தொழில்நுட்ப மதிப்பீட்டு குழுவினரின் அறிக்கை பெற்றுக்கொ ள்ளப்படுகின்றது.
4. பயன்படுத்தும் துறையினதும் வழங்கல் பிரிவினதும் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவினதும் அங்கத்தவர்களைக் கொண்ட குழுவொன்றினால் பொருட்களின் தரம் உறுதிப்படுத்தப்படுகின்றது.
5. பொருட்கள் கிடைத்தமைக்கான ஆவணம் தயாரிக்கப்படுவதுடன் பொருட் பதிவேட்டிலும் கொ ள்வனவு செய்யப்பட்ட பொருட்கள் பதியப்பட்ட பின்னரே வழங்குனர்களுக்கான கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்படுகின்றன.

களஞ்சியக் கட்டுப்பாடு :

1. களஞ்சியத்திற்கான பெறுகைகளும் களஞ்சியத்திலிருந்து வழங்குதலும் கணணி மயப்படுத்தப்பட்டுள்ளன.
2. களஞ்சிய செலவினங்கள் மாதாந்தம் களஞ்சிய பகுப்பாய்வு அறிக்கை மூலம் கணக்கிற்கு எடுத்துக் கொள்ளப்படுகின்றன.
3. வழங்கல் களஞ்சிய முற்பணக் கணக்கு பராமரிப்பு களஞ்சிய முற்பணக் கணக்கு ஆகிய இரண்டு முற்பணக் கணக்குகள் பிரதான பேரேட்டில் பேணப்பட்டு வருகின்றன.
4. பிரதான பேரேட்டின் முற்பணக் கணக்குகள் உப களஞ்சிய பேரேட்டுக் கணக்குடன் இணக்கம் செய்யப்படுகின்றன.
5. பீடங்களின் செலவினங்கள் கட்டுப்பாட்டுக்குள் இருக்கக்கூடிய முறையில் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.
6. களஞ்சியத்திலுள்ள பொருட்களின் மீதியும் அவற்றின் பெறுமதியும் எந்நேரமும் எடுத்துக் கொள்ளும் முறையில் கணனிமயப்படுத்தப்பட்டுள்ளது.

வருமதி கடன் :

1. ஊழியர்களுக்கான கடன் கொடுப்பனவு கணனிமயப்படுத்தியதுடன் அறவிடப்படும் தொகைகளும் உடனடியாக பதிவு செய்யப்படுகின்றது. அரை ஆண்டுக்கொருமுறை மீதிகள் எடுக்கப்படுவதுடன் அவை பிரதானபேரேட்டுக்கணக்குகளுடன் இணக்கம் செய்யப்படுகின்றன.

2. வழங்குனர்களுக்கான முற்பணங்கள் தொடர்ச்சியாக பரீட்சிக்கப்படுவதுடன் முற்பணக் கணக்குரிய பொருட்களை பெற்றுக் கொள்வதற்கும் உரிய நடவடிக்கை எடுக்கப்படுகின்றது.

மதிப்பாளரால் தொகுக்கப்பட்டது.

10- 514

அரசாங்கப் பகுதிகளின் நானாவித அறிவித்தல்கள்

நேஷன்ஸ் ட்ரஸ்ட் வங்கி PLC

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் வங்கியின் பணிப்பாளர்களால் சுற்று நிருபம் மூலம் நிறைவேற்றப்பட்ட தீர்மானம்

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட எற்பாடுகள்) சட்டத்தின் 8 ஆம் பிரிவின் நியதிகளின்படி பின்வரும் தீர்மானமானது, 07.08.2007 ஆம் திககதி நேஷன்ஸ் ட்ரஸ்ட் வங்கி PLC இன் பணிப்பாளர் சபையால் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது :-

"கொஹுவல, வூட்லன்ட் மாவத்த 15/1 ஆம் இலக்கத்தைச் சேர்ந்த ஹெறலியவலகே துமில் பசீன்திர பீரிஸ் என்பவர் கொழும்பு பிரசித்த நொத்தாரிசு எஸ். கே. தசநாயக்க என்பவரால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2003, செத்தெம்பர் 19 ஆந் தேதிய 1613 ஆம் இலக்க, 2003, செத்தெம்பர் 19 ஆந் தேதிய 1615 ஆம் இலக்க அத்துடன் 2004, மே 27 ஆம் தேதிய 1668 ஆந் இலக்க ஈட்டு முறிகள் மூலம் அவரால் பெற்றப்பட்ட நிதி வசதிகளின் மீள் கொடுப்பனவுக்கு பிணைப்பொறுப்பு ஒன்றாக இதற்கான அட்டவணையில் முழுமையாக விவரிக்கப்பட்ட உரிமைகளையும் ஆதனத்தையும் வளவுகளையும் கொழும்பு 1, யோர்க் வீதி, 76 ஆம் இலக்கத்தைச் சேர்ந்த முன்பு நேஷன்ஸ் ட்ரஸ்ட் வங்கி லிமிட்டெட் வங்கி என அறியப்பட்ட தற்போது (இதனகத்துப் பின்னர் வங்கி எனக் குறிப்பீடு செய்யப்படும்) நேஷன்ஸ் ட்ரஸ்ட் வங்கி PLC சார்பில் ஈடும் அடைமானமும் வைத்துள்ளாராதலாலும்,

அத்துடன் சொல்லப்பட்ட ஹெறலியவலகே துமில் பசீன்திர பிரிஸ் என்பவரால் சொல்லப்பட்ட முறிகள் மூலம் பெறப்பட்ட நிதி வசதிகள் மீதான கொடுப்பனவில் தவணை தவறியுள்ளாராதலாலும் 02.07.2007 ஆந் திகதியன்று உள்ளவாறாக, இருபது இலட்சத்து எழுபத்தோராயிரத்து முன்னூற்றெழுபது ரூபா நாற்பத்தொரு சதம் கொண்ட பணத்தொகையொன்று (ரூ. 20,71,370.41) நேஷன்ஸ் ட்ரஸ்ட் வங்கி PLC க்குத் தற்போது வருமதியாகவும் சேர்மதியாகவும் உள்ளதாலும், சொல்லப்பட்ட முறிகள் மீதான இருபது இலட்சத்து எழுபத் தோரா யிரத்து முன்னூற்றெழுபது ரூபா நாற்பத்தொரு சதம் கொண்ட பணத்தொகையொன்றை (ரூ. 20,71,370.41) 02.07.2007 ஆந் தேதியன்று உள்ளவாறாக, 03.07.2007 இல் இருந்து விற்பனை நாள் வரை மேலும் வட்டியுடனும் மேலதிக வரைவு மீதான நிலுவை மீது இரண்டு இலட்சத்து முப்பத்தோராயிரத்து ஐந்நூற்று நாற்பத்திரண்டு ரூபா எழுபத்தேழு சதம் (ரூ. 2,31,542.77) மற்றும் பதினாலு இலட்சத்து எண்பத்தொன்பதாயிரத்து நானூற்றுத் தொண்ணூறு ரூபா இருபத்தாறு சதம் மீது (ரூ. 14,89,490.26) ஆண்டொன்றுக்கு 40% சதவீத வட்டியுடனும் 02.07.2007 உள்ளவாறு நிலுவையில் எள்ள தொகை மீது ஆண்டொன்றுக்குழு 19.88 சதவீத கூட்டு வட்டியுடனும் மாதாந்த 'rests' களுடனும் அவற்றோடு சேர்ந்த நியதிச் சட்ட விதிப்பனவுகள், செலவுத் தொகைகள், விளம்பரச் செலவுகள் மற்றும் உறப்பட்ட வேறு இறுப்பனவுகள் ஆகிய வற்றோடு சேர்த்து (பெறப்பட்ட கொடுப்பனவுகள் எவையும் இருந்தால் அவற்றைக் கழித்து) அறவிடுவதற்காக, கொழும்பு Triad ஏலவிற்பனைகாரர் என். டி. டி. பி. சேனாநாயக்கா என்பவரால் பகிரங்க ஏலம் மூலம் விற்பனை செய்யப்பட வேண்டுமென் இத்தால் தீர்மானிக்கின்து.

அட்டவணை

மேல் மாகாணம் கொழும்பு மாவட்டம் சல்பிட்டி கோறள பல்லேபற்றுவில் தெகிவளை - கல்கிசை மாநகர சபை நிருவாக எல்லைகளுக்குள் கொஹுவல 3 ஆம் வட்டாரத்தில் களுபோவில கிழக்குக் கிராமத்தில் அமைந்துள்ள வூட்லண்ட் மாவத்த 15/1 என்னும் வரி மதிப்பீட்டு இலக்கத்தைக் கொண்டதும் மிலகஹாவத்த என அழைக்கப்படுவதுமான காணியின் உரிமம் பெற்ற நில அளவையாளர் டி. யு. ஜே. நானயக்கார என்பவரால் தயாரிக்கப்பட்ட 2002 மே 26 ஆம் தேதிய 3267 ஆம் இலக்க வரைபடத்தில் காட்டப்பட்டுள்ளதும் காணித்துண்டு 2B இன் அடையாள மிடப்பட்டதுமான அப்பிரிக்கப்பட்ட வரையறுக்கப்பட்ட காணித்துண்டு முழுவதும். சொல்லப்பட்ட காணித்துண்டு 2B, இன் எல்லைகள். வடக்கு : காணித்துண்டு 2A ; கிழக்கு : 20 அடி வீதி (124 ஆம் இலக்க வரைபடத்தில் காணித்துண்டு 6 ; தெற்கு : 124 ஆம் இலக்க வரைபடத்தில் உள்ள காணித்துண்டு 3 ; மேற்கு : சொல்லப்பட்ட 124 ஆம் இலக்க வரைபடத்தில் உள்ள காணித்துண்டு 1 (வரி மதிப்பீட்டு இலக்கம் 17, வூட்லன்ட் மாவத்தை) அத்துடன் கல்கிசை காணிப்

பதிவகத்தில் தொகுதி/பக்கம் B 2670/48 பதிவுலு செய்யப்பட்டதும் 3267 ஆம் இலக்க சொல்லப்பட்ட வரைபடத்தின்படி ஏழு தசம் மூன்று பேர்ச்சுகள் (0ஏ. 0றூ. 7.3பே.) விஸ்தீரணம் கொண்டதுமான காணி அதாவது, பின்வரும் காணிக்கான அதன் மேல் மற்றும் அதன் வழியாக உள்ள பாதை உரிமையுடன் சேர்த்து.

மேலே சொல்லப்பட்ட களுபோவில கிழக்கு, வூட்லன்ட் மாவத்தையில் அமைந்துள்ளதும் மிலலகஹாவத்த என அழைக்கப்படுவதுமான காணியின் உரிமம்பெற்ற நிலஅளவையாளர் பி. டபிள்யூ. பத்திரனவினால் தயாரிக்கப்பட்ட 1981, யூலை 24 ஆந் தேதிய 124 இலக்க வரைபடத்தில் காட்டப்பட்டுள்ளதும் காணித்துண்டு 6 என அடையாளமிடப்பட்டதுமான (வீதிக்கான ஒதுக்குகை 20 அடி அகலம்) இதன் எல்லைகள் - வடக்கு : வூட்லன்ட் மாவத்தை ; கிழக்கு : காணித்துண்டு 5 ; தெற்கு : 124 ஆம் இலக்க வரைபடத்தில் உள்ள காணித்துண்டு 4 ; மேற்கு : சொல்லப்பட்ட 124 ஆம் இலக்க வரைபடத்தில் உள்ள காணித்துண்டு 3 மற்றும் காணித்துண்டு 2. கல்கிசை காணிப் பதிவகத்தில் தொகுதி/பக்கம் M 1433/212 இல் பதிவு செய்யப்பட்டதும் சொல்லப்பட்ட 124 ஆம் இலக்க வரைபடத்தின் பிரகாரம் பன்னிரண்டு பேர்ச்சுகள் (0ஏ. 0றூ. 12பே.) விஸ்தீரணம் கொண்டதுமான காணி.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

தேஜா- சில்வா,
கம்பனிச் செயலாளர்.

76, யோர்க் வீதி,
கொழும்பு 1.

10-487

இரஜரட்ட அபிவிருத்தி வங்கி

1990 ஆம் ஆண்டின் 04 ஆம் இலக்க, வங்கியினால் கொடுக்கப்பட்ட கடன் அறவீடும் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் 1997 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க பிரதேச அபிவிருத்தி வங்கிச் சட்டத்தின் 43 (ஆ) பிரிவின் பிரகாரம் அங்குராப்பணம் செய்யப்பட்ட இரஜரட்ட அபிவிருத்தி வங்கியின் சட்டபூர்வ சம்பிரதாய வேண்டுகோளின்படி எடுக்கப்பட்ட தீர்மானம்

கடனாளியின் பெயர் : திரு. இரட்னசிறி அத்தநாயக்க
கிளை: கல்ணாவ
கணக்கு இலக்கம் : 8035

2006 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 3 ஆந் திகதி அபிவிருத்தி வங்கியின் பணிப்பாளர் சபையினால் 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கியினால் கொடுக்கப்படும் கடன் திரும்பப்பெறும் (விஷேட சரத்து) பிரகாரம் கீழ்க்காணும் பிரேரணை ஏகமானதாக நிறைவேற்றப்பட்டுள்ளது என்பது இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

"இரஜரட்ட அபிவிருத்தி வங்கியின் வழக்கறிஞரும் பிரசித்த நொத்தாரிசுமான நதி ஏ. குறேரா அவர்களால் உறுதிப்படுத்தப்பட்ட 2000 செத்தெம்பர் மாதம் 26 ஆந் திகதியுடைய இலக்கம் 539 கொண்ட ஈட்டுறுதியின் பிரகாரம் கல்னாவ இஹலகம றோட்டில் வசிக்கும் இரட்னசிறி அத்தநாயக்க எனப்படும் ஈட்டுக்காரரும் கடனாளியுமான ஆகியவரால் கொடுக்கத் தவறியபடியால் அந்த ஈட்டுறுதிப்படி 2007.03.31 ஆந் திகதிக்கு இரஜரட்ட அபிவிருத்தி வங்கிக்கு கிடைக்க வேண்டியஏழு இலட்சத்து நாலாயிரத்து எழுபத்திநாலு ரூபா ஏழு சதம் (ரூ. 7,04,074.07) முதலும் அத்திகதியிலிருந்து இரண்டு இலட்சத்து அறுபத்தாறாயிரத்து அறுநூறு ரூபா (ரூ. 2,66,600.00விற்கு) ஆண்டிற்கு இருபது வீதம் (20%) விற்பனைத் திகதி வரை வட்டியுடன் விளம்பரச் செலவு அதற்குண்டான வேறு செலவுகளும் அதில் ஏதாவது தொகை கொடுபட்டிருந்தால் அத்தொகையை வரவு வைத்து மேற்கூறிய 539 ஈட்டுறுதியின்படி இரஜரட்ட அபிவிருத்தி வங்கிக்கு ஈடுவைத்திருக்கும் இதன்கீழ் அட்டவணையில் விபரிக்கப்பட்டிருக்கும் ஆதனத்தை உத்தரவுபெற்ற ஏலவிற்பனையாளர்கள் சொக்மனும் சமரவிக்ரமவும் ஆகியவர்களால் பிரசித்த ஏலவிற்பனையில் விற்பனை செய்ய வேண்டும் என 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்கச் சட்டத்தின்படி இரஜரட்ட அபிவிருத்தி வங்கியின் பணிப்பாளர் சபை ஏகமனதாக தீர்மானித்துள்ளது."

அட்டவணை

மேற்கூறிய இல. 539 ஈட்டுறுதிப்படி மேற்படி வங்கியில் அடவு வைத்திருக்கும் வடமத்திய மாகாணம், அநுராதபுர மாவட்டம், கல்னாவ பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட நேகம்பா கோறளை இல. 471 கிராம சேவையாளர் பிரிவில் அ. ஜ. ப. 949 நிதிகும்பயாய எனும் கிராமத்தில் இருக்கும் இரண்டு றூட் (2 றூட்) காணிக்கு எல்லைகள் - வடக்கு : எல். ஏ. சிரியலதாவிற்கும் எச். கே. எம். முத்துமெனிக்காவிற்கும் உடைய காணிகள் ; கிழக்கு : அரச காணியும் எச். கே. எம். முத்துமெனிக்காவின் காணியும் ; தெற்கு : அரச காணியும் பாதையும் ; மேற்கு : எல். ஏ. சிரியலதாவின் காணியும் றோட்டிற்காக விடப்பட்ட காணியும். இந்த ஈட்டுறுதி அநுராதபுரம் காணி பதிவு அலுவலகத்தில் எல்.டி.ஓ. 154/97 இல் 2000.10.17 ஆந் திகதி பதியப்பட்டுள்ளது.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

ரட்ணசிறி சிறிவர்தன,
பொது முகாமையாளர்,

இரஜரட்ட அபிவிருத்தி வங்கி தலைமை அலுவலகம்,
இல. 338/15,
வங்கிப் பகுதி,
அநுராதபுரம்.

10-474/2

இரஜரட்ட அபிவிருத்தி வங்கி

1990 ஆம் ஆண்டின் 04 ஆம் இலக்க, வங்கியினால் கொடுக்கப்பட்ட கடன் அறவீடும் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் 1997 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க பிரதேச அபிவிருத்தி வங்கிச் சட்டத்தின் 43 (ஆ) பிரிவின் பிரகாரம் அங்குராப்பணம் செய்யப்பட்ட இரஜரட்ட அபிவிருத்தி வங்கியின் சட்டபூர்வ சம்பிரதாய வேண்டுகோளின்படி எடுக்கப்பட்ட தீர்மானம்

கடனாளியின் பெயர் : திரு. ஜயவீர கங்கானன்கே சுமித்திர ஜயவீர
கிளை: பொலன்னறுவை
கணக்கு இலக்கம் : 10 - 6032 - 1

2006 ஆம் ஆண்டு மாசி மாதம் 18 ஆந் திகதி அபிவிருத்தி வங்கியின் பணிப்பாளர் சபையினால் 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கியினால் கொடுக்கப்படும் கடன் திரும்பப்பெறும் (விஷேட சரத்து)

பிராகரம் கீழ்க்காணும் பிரேரணை ஏகமானதாக நிறைவேற்றப்பட்டுள்ளது என்பதை இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

"இரஜரட்ட அபிவிருத்தி வங்கியின் வழக்கறிஞரும் பிரசித்த நொத்தாரிசுமான பிரசன்ன சரசி ஹரிச்சந்திர அவர்களால் உறுதிப்படுத்தப்பட்ட 2005 சித்திரை மாதம் 11 ஆம் திகதியுடைய இலக்கம் 2206 கொண்ட ஈட்டுறுதியின் பிரகாரம் பொலன்னறுவை வெவேதென்ன இலக்கம் 2 இல் வசிக்கும் ஜயவீர கங்கானன்கே சுமித்திர ஜயவீர எனப்படும் ஈட்டுக்காரரும் கடனாளியுமான ஆகியவரால் கொடுக்கத் தவறியபடியால் அந்த ஈட்டுறுதிப்படி 2007.03.31 ஆந் திகதிக்கு இரஜரட்ட அபிவிருத்தி வங்கிக்கு கிடைக்க வேண்டிய ஆறு இலட்சத்து தொண்ணூற்று இரண்டாயிரத்து தொளாயிரத்து தொண்ணூற்று ஆறு ரூபா எழுபத்தொரு சதம் (ரூ. 6,92,996.71) முதலும் அத்திகதியிலிருந்து நாலு இலட்சத்து தொண்ணூற்றையாயிரம் ரூபா (ரூ. 4,95 ,000.விற்கு) வருடம் இருபது வீதம் (20%) விற்பனைத் திகதி வரை வட்டியுடன் விளம்பரச் செலவு அதற்குண்டான வேறு செலவுகளும் அதில் ஏதாவது தொகை கொடுபட்டிருந்தால் அத் தொகையை வரவு வைத்து மேற்கூறிய 2206 ஈட்டுறுதியின்படி இரஜரட்ட அபிவிருத்தி வங்கிக்கு ஈடுவைத் திருக்கும் இதன்கீழ் அட்டவணையில் விபரிக்கப்பட்டிருக்கும் ஆதனத்தை உத்தரவுபெற்ற ஏலவிற்பனையாளர்கள் சொக்மனும் சமரவிக்ரமவும் ஆகியவர்களால் பிரசித்த ஏலவிற்பனையில் விற்பனை செய்ய வேண்டும் என 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்கச் சட்டத்தின்படி இரஜரட்ட அபிவிருத்தி வங்கியின் பணிப்பாளர் சபை ஏகமனதாக தீர்மானித்துள்ளது."

அட்டவணை

வடமத்திய மாகாணம், பொலன்னறுவை மாவட்டம், லங்காபுர பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட மெதவும் எகொட பத்து 73E, லக்ப உயன கிராம சேவகர் பிரிவில் சேவா முக்த எனும் கிராமத்தில் இருக்கும் சர்வே ஜெனரல் அவர்களால் உறுதிப்படுத்தப்பட்டு அவர் பொறுப்பிலிருக்கும் அ. ஜ. பி. 13 எனும் வரைபடத்தில் இலக்கம் 83 என அடையாளமிடப்பட்டுள்ள மேற்படி முதலாவது அட்டவணையில் விபரிக்கப்பட்டிருக்கும் ஆதனத்துக்கு உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் ஆர். பி. அபயக்கோன் அவர்களால் உறுதிப்படுத்தப்பட்ட இல. ஜி. 2004 105 என்ற வரைபடத்தில் இல. 1 எனக் குறிப்பிடப்பட்டிருக்கும் ஆதனத்திற்கு எல்லைகள் – வடக்கு : அ. ஜ. பி. பி. 13 என்ற வரைபடத்தில் இல. 81 உம் 82 உம் கொண்ட காணித்துண்டுகள் ; கிழக்கு : அ. ஜ. பி. பி. 13 வரைபடத்தில் இல. 73 (பாதை) ஆகிய காணியும் ; தெற்கு : பாதையும் ; மேற்கு : அ. ஜ. பி. பி. ஆவது வரைபடத்தில் இல. 83 உடைய காணித்துண்டும் ஆகிய எல்லைகளுக்குள் இரண்டு றூட் (0ஏ. 2றூட் 0பே.) அல்லது சைபர் தசம் இரண்டு சைபர் இரண்டு மூன்று ஹெக்டயர் (0.2023ஹெக்.) விஸ்தீரணமுடைய காணியும் அதற்குண்டான சகலதும். இந்த ஈட்டுறுதி பொலன்னறுவை காணி பதிப்பு அலுவலகத்தில் எல்.டி.ஓ. 3/5/3/101 இல் பதியப்பட்டுள்ளது.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

ரட்ணசிறி சிறிவர்தன,
பொது முகாமையாளர்,

இரஜரட்ட அபிவிருத்தி வங்கி (தலைமை அலுவலகம்),
இல. 338/15,
வங்கிப் பகுதி,
அநுராதபுரம்.

10–474/1

தேசிய அபிவிருத்தி வங்கி, பீஎல்சீ

திருத்தப்பட்டவாறான 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, வங்கிகளினால் கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் பணிப்பாளர் சபையால் நிறைவேற்றப்பட்ட தீர்மானம்.

2007 மே 21 ஆந் தேதியன்று நடைபெற்ற தேசிய அபிவிருத்தி வங்கி பீஎல்சீ தாபனத்தினது பணிப்பாளர் சபையின் கூட்டத்தில் பின்வரும் தீர்மானம் சிறப்பாகவும் ஏகமனதாகவும் நிறைவேற்றப்பட்டது:–

"(கடன்பெறுநரான) கொழும்பு 02ஜைச்சேர்ந்த அனுருத்த ஹர்ஷகுமார சேனாரத்ன என்பவர், முன்னைநாள் தேசிய அபிவிருத்தி வங்கி லிமிற்றெற் ஆக விருந்த (வங்கி) தேசிய அபிவிருத்தி வங்கி, பீஎல்சீ தாபனத்தின் சார்பில் பிரசித்த நொத்தாரிசு (திருவாட்டி) என். ஏ. எஸ். இலங்கக்கூன் அவர்களினால் இரண்டும் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2005.02.14 ஆந் தேதிய 2398 ஆம் இலக்க முறியின் மீதும் 2006. 08. 31 ஆந் தேதிய 4845 ஆம் இலக்கச் சாட்டுதல் உறுதியின்மீதும் வருமதியான கொடுப்பனவைச் செலுத்துவதில் தவணைதவறியுள்ளாராதலாலும், அத்துடன் 2007 ஏப்பிறல் 30 ஆந் தேதியன்றுள்ளவாறாக மூன்று இலட்சத்து எண்பத்தோராயிரத்து முப்பத்தொன்பது ரூபா (ரூ. 381.039) கொண்ட தொகை சொல்லப்பட்ட முறிமீது வங்கிக்கு வருமதியாக வந்துள்ளதாதலாலும், வங்கியின் பணிப்பாளர் சபையானது, 1995 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க, வங்கிகளினால் கடன்களை அறவிடுதல் (விஷேட ஏற்பாடுகள் (திருத்த) சட்டத்தினால் திருத்தப்பட்ட வாறான (பிரதான சட்டமான) 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, வங்கிகளினால் கடன்களை அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் கீழ் தமக்கு உரித்தாக்கப்பட்ட தத்துவங்களின்கீழ் செயற்பட்டு, சொல்லப்பட்ட பணத் தொகையான மூன்று இலட்சத்து எண்பத்தோராயிரத்து முப்பத்தொன்பது ரூபா (ரூ. 381.039) கொண்ட தொகையை அல்லது விற்பனை செய்யப்படும் நேரத்தில் செலுத்தப்படா தெஞ்சியுள்ள அதன் ஏதேனும் பாகத்தையும், சொல்லப்பட்ட முறிமீது வருமதியான கூட்டுமொத்தத் தொகையான மூன்று இலட்சத்து எழுபத்தையாயிரத்துதொளாயிரத்து அறுபத்தியொரு ரூபா (ரூ. 375,961) கொண்ட தொகைமீது 2007 மே 1 ஆந் நாள் தொடக்கம் விற்பனைத் தேதிவரை ஆண்டொன் றுக்குப் பன்னிரெண்டு தசம் ஐந்து வீதப்படி (12.5%) வருமதியான வட்டியையும், அதன்பின்னர் பெறப்பட்ட கொடுப்பனவுகள் (எவையேனுமிருப்பின்) அவற்றைக் கழித்து, பிரதான சட்டத்தின் 13 ஆம் பிரிவின் நியதிகளின்படி அடையப்பட்ட விளம்பரச் செலவுகள், விற்பனைச் செலவுகள் மற்றும் ஏனைய இறுப்பனவுகள் என்பவற்றுடன் சேர்த்து அறவிடுவதற்காக, சொல்லப்பட்ட முறிமூலம் வங்கிக்கு ஈடுவைக்கப்பட்ட கீழே விவரிக்கப்பட்ட ஆதனமும் வளவுகளும், அந்த ஆதனத்துக்கும் வளவுகளுக்குமான இறையிலி மற்றும் வேறு உரிமை, உரித்து, அக்கறை என்பன உட்பட, உத்தரவுபெற்ற ஏலதாரரான திரு. ஐ. டபிள்யு. ஜயசூரிய அவர்களால் பகிரங்க ஏல மூலம் விற்பனை செய்யப்பட வேண்டுமென இத்தால் தீர்மானிக்கின்றது."

ஈடுவைக்கப்பட்ட ஆதனத்தின் விவரணம்

மேல்மாகாணம் களுத்துறை மாவட்டத்தில் ராய்கம்சியனே கோறளையின் கும்புக்கே பத்துவிலுள்ள ஒலபத்வ மற்றும் கும்புக்கே கிராமங்களில் அமைந்துள்ளதும், திக்பெத்தஹேன மற்றும் கருவல எனவழைக்கப்படும் காணியினதாய் உரிமம்பெற்ற நில அளவையாளரான கே. டீ. ஜே. வீரசிங்க என்பவரினால் தயாரிக்கப்பட்ட 1992.12.21 ஆந் தேதிய 1720 ஆம் இலக்க வரைபடத்தில் காணித்துண்டம் 168 எனக் குறித்துக்காட்டப்பட்டதும், பிரிக்கப்பட்டு வரையறுக்கப்பட்டதுமான அக்காணித்துண்டு

அடங்கலும் ; அதன் எல்லைகள் பின்வருமாறு :- வடக்கில் : காணித்துண்டங்கள் 239 மற்றும் 240, கிழக்கில் : காணித்துண்டங்கள் 239, 169,170 ; தெற்கில் : காணிகள் 169, 170, 220 ; மற்றும் மேற்கில் : காணித்துண்டங்கள் 229 மற்றும் 240; பரப்பளவில் இது, பன்னிரெண்டு தசம் இரண்டுஆறு பேர்ச்சுக்களை (0ஏ. 0ரூ. 12.26) கொண்டுள்ளதுடன், மேற்கூறப்பட்ட 1720 ஆம் இலக்க சொல்லப்பட்ட வரைபடத்திலுள்ள காணித்துண்டங்கள் 229, 238, 13 மற்றும் 248,266 என்பனமீதான பாதையுரிமையுடன் சேர்த்து, ஹொரண காணிப் பதிவகத்தில் தொகுதி/ பக்கம் சீ 193/ 103 என்பதில் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

பணிப்பாளர்கள் சபையின் கட்டளைப்படி,

பணிப்பாளர்/பொது முகாமையாளர்
தேசிய அபிவிருத்தி வங்கி பீஎல்சீ

10 - 538

றுஹுண அபிவிருத்தி வங்கி - மாத்தறை நகர சபை

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கியினால் வழங்கப்பட்ட கடன் அறவிடல் (விஷேடஏற்பாடுகள் சட்டத்தின் 04 வது அதிகாரத்தின் கீழ் றுஹுண அபிவிருத்தி வங்கியின் பணிப்பாளர்சபையினால் அங்கிகரிக்கப்பட்ட தீர்மானம்

1997 ஆம் ஆண்டின் 06 ஆம் இலக்க ஆண்டின் 1 ஆம் இலக்க என்ற பிரதேச அபிவிருத்தி வங்கி சட்டத்தின் கீழும் இலங்கை மத்திய வங்கியின் நிதிச் சபையினாலும் பிரசுரிக்கப்பட்ட 1998.04.24 ஆந் திகதிய அதி விசேஷட வர்த்தமானிப் பத்திரிகை அறிவித்தலுக்கிணங்க உருவாக்கப்பட்ட றுஹுன அபிவிருத்தி வங்கிக்கு சாட்டப்பட்ட அதிகாரத்தின் படி,2005.07.12 ஆந் திகதி நடாத்தப்பட்ட றுஹுன அபிவிருத்தி வங்கி பணிப்பாளர்சபை கூட்டத்திலே கீழ் கண்ட தீர்மாணங்கள் ஏகமனதாக அங்கீகரிக்கப்பட்டது :-

"றுஹுன அபிவிருத்தி வங்கிக்கு பிரசித்திபெற்றநொத்தாரிஸும் சட்டத்தரணியுமான திருமதி வரொஜனி விக்ரமசிங்ஹ என்பவரினால் அத்தாட்சிப் படுத்தப்பட்ட 1990. 01. 25 ஆந் திகதிக்குரிய இலக்கம் 1791 ஈட்டுப்பத்திரத்தின் கீழ் அறவிட வேண்டிய பணம்செலுத்தல் மாத்தறை, ஹித்தடியகிழக்கு குமாரதாச மாவத்தை, உஸ்வத்த இலக்கம் 1/124 இல் வசிக்கும் கரணாரத்தினகே திலகரத்னயும், அம் முகவரியில் வசிக்கும் சஓஜனி எதிரிசிங்ஹ என்போரினால் செலுத்தாது விடப்பட்ட தாகவும், அவ் ஈட்டுப்பத்திரத்தின் கீழ் ஒரு இலட்சத்து பதினை யாயிரம் (ரூ. 115,000 பணம் றுஹுன அபிவிருத்தி வங்கிக்கு செலுத்தவேண்டியிரப்பதாகவும், 2004. 06. 10 ஆம் திகதி யிலிருந்துவருடத்திற்கு 25% படி ரூபா ஒரு இலட்சத்து பதினையாயிரம் (ரூ. 115,000) க்கான பணம் ஏலவிற்பனை திகதியிலிருந்து வட்டியுடன் ஏலவிற்பனை செலவும் சேர்த்து ஏதாவதொரு பணம் கிடைத்திருப்பின் அவற்றை குறைத்துக் கொண்டும், அறவிடவேண்டிய பணத்துக்கான மாத்தறை அதிகாரம் பெற்ற ஏலவிற்பனையாளரான ஜீ. பி. ஆனன்த என்பவரினால் இல. 1791 என்ற ஈட்டுப்பத்திரத்தின் கீழ் ஈடுவைக்கப்பட்ட சொத்துக்களும் ஏனையவற்றுடன் விற்பனை செய்யவிருப்பதாக வங்கியின் பணிப்பாளர்சபை இதில் தீர்மானித்துள்ளது".

ஈடுவைக்கப்பட்ட ஆதனங்கள் பற்றிய விவரணம்

1. தென் மாகாணத்தின் மாத்தறை மாவட்டத்திலே வெலிவேரியவில் அமைந்துள்ள -உஸ்வத்தே இலக்கம் 02, 09, 12 எனும் ஒன்றிணைக்கப்பட்ட காணியின் எல்லையாக வடக்கே : இக் காணியின் இலக்கம் 17, என்ற துண்டும் ; கிழக்கே : பாதையின் மீதியாக உள்ள நிலத்துண்டும் ; தெற்கே : பெரு வீதியும் ; மேற்கே : அக் காணியின் இல. 03, 08, 07, 13 உம் 16 உம் கொண்ட துண்டும், என்ற எல்லைகளைக்கொண்ட ஒரு ரூட் பதினான்கு தசம் ஐந்து பர்ச்சஸ் (0ஏ. 01றாட். 14.5பே) கொண்ட மிகப்பெரிய காணியின் அவ் இலக்கம் உம் 912 உம் என்ற ஒன்றிணைக்கப்பட்ட காணியின் எல்லைகள் வடக்கே : இக்காணியின் 17 என்ற துண்டும் ; கிழக்கே : பாதைக்கு மீதப்படுத்திய நிலப்பரப்பும் : தெற்கு : இக்காணியின் இலக்கம் 2 என்ற துண்டும் ; மேற்கே : அக் காணியின் இலக்கம் 07, 13 உம், இலக்கம்16 உம் என்ற துண்டுகளை உள்ளடக்கிய பர்சஸ் முப்பத்து மூன்று தசம் ஏழும் ஐந்து (0ஏ. 0பே. 33.75பே) கொண்ட மிகப்பெரிய காணியை அதிகாரம்பெற்ற நில அளவையாளரான திரு. ஸீ. எஸ் ஜயவர்த்தன என்பவரினால் 1996 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 04 ஆம் திகதி அளந்து ஒழுங்கு செய்யப்பட்ட இல. 5363 எனும் வரைபடத்திற் கிணங்க மீண்டும் பிரித்துவேறாக்கப்பட்ட ஏ எழுத்தைக் கொண்ட துண்டுக்கு எல்லையாக வடக்கே : ஆரம்பகாணியின் இலக்கம் 17 என்ற துண்டும் ; கிழக்கே : பாதைக்கு மிகுதியாக உள்ளநிலத்திணிவும்; தெற்கே : இலக்கம் 5363 எனும் வரைபடத்திற்கிணங்க பிரித்து வேறாக்கப்பட்ட இக் காணியின் பீ எழுத்தைக் கொண்ட துண்டும் ; மேற்கே : இக் காணியின் 13உம் 16உம் கொண்ட துண்டும் எனும் எல்லைக்குள் அமைந்துள்ள பதினான்கு தசம் ஐந்து ஸைபர் பர்சஸ் (0ஏ. 0ரூ. 14.50பே) கொண்ட மிகப்பெரிய (இங்குள்ள பரிசாகபெறுவேரின் கணவரினால் செய்துகொண்டுள்ள 124/2 என்ற வீட்டை அவருக்கு கைவிட்டுவிட்டு) அனைத்து மரங்கள் பழவர்க்கங்கள் போன்றவற்றுடன் நிலபரப்பும்.

2. அவ் வெலிவேரியவில் அமைந்துள்ள உஸ்வத்தே இலக்கம் 02, 09உம் 12 என் ற ஒன்றிணைக்கப்பட்ட துண்டுகளின் இலக்கம் 12. 09உம், ஒன்றிணைக்கப்பட்ட இருதுண்டுகளை இலக்கம் 5363 என்ற வரைபடத்தின் பிரகாரம் மீண்டும் பிரித்து வேறாக்கப்பட்ட பீ எழுத்தைக்கொண்ட காணித்துண்டு பிரித்துள்ள இக்காணியின் ஏ எழுத்தைக் கொண்ட துண்டும் ; தெற்கே : இக்காணியின் மீதியாகவுள்ள இலக்கம் 09 என்ற துண்டும் ; மேற்கே : வருமான வரி இலக்கம் 126/16 என்ற இக் காணியின் ஆரம்ப காணி இலக்கம் 13 என்ற துண்டும் எனும் எல்லையாகக்கொண்ட இதில் சைபர் தசம் மூன்று சைபர் (0ஏ. 0றா. 0.30பே.) கொண்ட மிகப் பெரிய முக்கோணக் காணியின் அனைத்து மரங்கள் வழவர்க்கங்கள் உட்பட நிலமும் ஆகும்.

இக் காணி ஏ 417/ 196/197/ 27/ 73 கீழ் 2000.01.26 ஆந் திகதி மாத்தறை காணிப் பதிவுஅலுவலகத்தின் பதியப்பட்டுள்ளது.

பணிப்பாளர் சபை ஆணைப்படி,

(எஸ். ஜே. ரத்நாயக),
தலைவர்.

றுஹுன அபிவி
ருத்தி வங்கி,
பிரதான அலுவலகம், பம்புரன,
மாத்தறை.

10 - 641

செலான் வங்கி ப. வ. க.

(2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் கீழ் ஒரு பகிரங்க வரையறுக்கப்பட்ட கம்பனியாகப் பதிவு செய்யப்பட்டது - கம். பதிவு இல. PQ 9)

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்களை அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ், செலான் வங்கி ப. வ. க. பணிப்பாளர் சபையினால் அங்கீகரிக்கப்பட்ட தீர்மானம்

கணக்கு இல. : 0170-01478800-101- (அபிவிருத்தி வங்கித் தொழில் கிளை)

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்களை அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 8 ஆம் பிரிவின் கீழ், வரையறுக்கப்பட்ட செலான் வங்கி ப. வ. க. பணிப்பாளர் சபையினால் 2007.08.29 ஆந் திகதி நடத்தப்பட்ட கூட்டத்தில் பின்வருமாறு விசேடமாகவும் ஏகமனதாகவும் தீர்மானிக்கப்பட்டதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது :-

"ரஜவெல்லயைச் சேர்ந்த லியனறாலலாகே அஜித் பிரஷாந்த தர்மசூரிய மற்றும் சந்திரசேகர ராஜகருண அபேகூன் வசல பண்டாரநாயக்க முதியான்சே ராலஹாமிலாகே கப்புவத்த வளவ்வே ஜேர்ட்றூட் கப்புவத்த ஆகியோர் 'கடனெடுத்தவர்கள்' என்ற வகையில் செலான் வங்கி ப. வ. க. (2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் கீழ் ஒரு பகிரங்க வரையறுக்கப்பட்ட கம்பனியாகப் பதிவு செய்யப்பட்டது - கம். பதிவு இல. PQ 9) சார்பில் பிரசித்த நொத்தாரிசு எஸ். பரம்சோதி என்பவரால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2004, மே 17 ஆந் திகதிய 1481 ஆம் இலக்க முறியின் மீது வருமதியான கொடுப்பனவில் தவணை தவறியுள்ளார். ஆதலால், இப்பொழுது 2006, செத்தெம்பர் 30 ஆந் திகதியன்றுள்ளவாறு சொல்லப்பட்ட முறியின் மீது பதின்மூன்று இலட்சத்து நாற்பதாயிரத்து ஐநூற்றிருபது ரூபா (ரூ. 13,40,520) செலான் வங்கி ப. வ. கம்பனிக்கு உரியதாகச் செலுத்தப்பட வேண்டியுள்ளது. ஆதலால் சொல்லப்பட்ட பதின்மூன்று இலட்சத்து நாற்பதாயிரத்து ஐநூற்றிருபது ரூபா (ரூ. 13,40,520) பணத்தொகையையும் 2006, ஒற்றோபர் 1 ஆந் திகதி முதல் விற்பனைத் திகதி வரை ஆண்டொன்றுக்கு முப்பத்து மூன்று சதவீதப்படி (33%) வட்டியையும் விளம்பரச் செலவுகளையும் உறப்பட்ட வேறு அறவீடுகளையும், அதன் பின்னர் கொடுப்பனவுகள் எவையும் பெறப்பட்டிருப்பின் அவற்றைக் கழித்து அறவிடுவதற்காக, சொல்லப்பட்ட 1481 ஆம் இலக்க முறியினால் செலான் வங்கி ப. வ. கம்பனிக்கு ஈடுவைக்கப்பட்டதும் இதற்கான அட்டவணையில் மேலும் விவரிக்கப்படுவதுமான ஆதனம் உத்தரவுபெற்ற ஏலதாரர் திரு. ஐ. டபிள்யூ. ஜயசூரிய என்பவரால் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்பட வேண்டுமென செலான் வங்கி ப. வ. க. பணிப்பாளர் சபை 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தினால் உரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் கீழ் இத்தால் தீர்மானிக்கின்றது."

அட்டவணை

மத்திய மாகாணம், கண்டி மாவட்டத்தில் பாத்த தும்பரையின் உடுகம்பஹ கோறளேயில் குண்டசாலையில் அமைந்துள்ள பள்ளேகெலவத்த என்றழைக்கப்படும் காணியின் பகுதிகளாயுள்ளனவும் உத்தரவுபெற்ற நில அளவையாளர் சேனரத் விஜேரத்னவால் தயாரிக்கப்பட்ட 1994, யூலை 7 ஆந் திகதிய 2864 ஆம் இலக்க வரைபடத்தின்படி பதின்மூன்று தசம் ஆறு மூன்று பேர்ச்சஸ் (0ஏ. 0றூ. 13.63பே.) விஸ்தீரணமுள்ள துண்டு 1, பதினைந்து தசம் இரண்டு இரண்டு பேர்ச்சஸ் (0ஏ. 0றூ. 15.22பே.) விஸ்தீரணமுள்ள துண்டு 2, பதினைந்து தசம் நான்கு இரண்டு பேர்ச்சஸ் (0ஏ. 0றூ. 15.42பே.) விஸ்தீரணமுள்ள துண்டு 5, பதினைந்து தசம் இரண்டு இரண்டு பேர்ச்சஸ் (0ஏ. 0றூ. 15.22 பே.) விஸ்தீரணமுள்ள துண்டு 7 எனக் குறிக்கப்பட்டனவும் மொத்தமாக ஒரு றூட் பத்தொன்பது தசம் நான்கு ஒன்பது பேர்ச்சஸ் (0எ. 1றூ. 19.49பே.) கூட்டு விஸ்தீரண முள்ளனவுமான பிரித்து வரையறுக்கப்பட்ட தொடர்ச்சியான காணிப்பங்கீடுகள் எல்லாம் அவற்றின்கண் அமைந்துள்ள மரங்கள், தோப்புகள் மற்றும் ஏனைய எல்லாவற்றுடனும். ஒன்றாக இவற்றின் எல்லைகள்- கிழக்கு : வரைபடம் இல. PP/Maha 3298 இல் துண்டு 6 ; தென்மேற்கு : சொல்லப்பட்ட வரைபடத்தில் துண்டு 3 எனக் குறிக்கப்பட்ட வீதி ; மேற்கு : சொல்லப்பட்ட வரைபடத்தில் துண்டு 3 எனக் குறிக்கப்பட்ட வீதி ; வடமேற்கு : ஒதுக்கம். இது கண்டி காணிப்பதிவகத்தில் தொகுதி பக்கம் E620/ 181 இன்கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

சீ. கொட்டிகல,
சிரேஷ்ட பிரதிப் பொது முகாமையாளர் - சட்டம்.

10-646/ 1

செலான் வங்கி ப. வ. க.

(2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் கீழ் ஒரு பகிரங்க வரையறுக்கப்பட்ட கம்பனியாகப் பதிவு செய்யப்பட்டது - கம். பதிவு இல. PQ 9)

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்களை அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ், செலான் வங்கி ப. வ. க. பணிப்பாளர் சபையினால் அங்கீகரிக்கப்பட்ட தீர்மானம்

கணக்கு இல. : 0170-01733581-101 - (கண்டி கிளை).

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்களை அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 8 ஆம் பிரிவின் கீழ், வரையறுக்கப்பட்ட செலான் வங்கி ப. வ. க. பணிப்பாளர் சபையினால் 2007.08.17 ஆந் திகதி நடத்தப்பட்ட கூட்டத்தில் பின்வருமாறு விசேடமாகவும் ஏகமனதாகவும் தீர்மானிக்கப்பட்டதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது :-

"கிரிபத்கும்புரவைச் சேர்ந்த பிட்டியகெதர நிமல் ஜயசிங்க என்பவர் 'கடனெடுத்தவர்' என்ற வகையில் செலான் வங்கி ப. வ. க. (2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் கீழ் ஒரு பகிரங்க வரையறுக்கப்பட்ட கம்பனியாகப் பதிவு செய்யப்பட்டது - கம். பதிவு இல. PQ 9) சார்பில் பிரசித்த நொத்தாரிசு எஸ். பரம்சோதி என்பவரால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2005, திசெம்பர் 13 ஆந் திகதிய 2115 ஆம் இலக்க முறியின் மீது வருமதியான கொடுப்பனவில் தவணை தவறியுள்ளார். ஆதலால், இப்பொழுது 2006, நவெம்பர் 26 ஆந் திகதியன்றுள்ளவாறு சொல்லப்பட்ட முறியின் மீது இருபத்தொரு இலட்சத்து நான்காயிரத்து எண்ணூற்றைம்பத்திநான்கு ரூபா எழுபத்தொன்பது சதம் (ரூ. 21,04,854.79) செலான் வங்கி ப. வ. கம்பனிக்கு உரியதாகச் செலுத்தப்பட வேண்டியுள்ளது. ஆதலால்

சொல்லப்பட்ட இருபத்தொரு இலட்சத்து நான்காயிரத்து எண்ணூற்றைம்பத்திநான்கு ரூபா எழுபத்தொன்பது சதம் (ரூ. 21,04,854.79) பணத்தொகையும் 2006, நவெம்பர் 27 ஆந் திகதி முதல் விற்பனைத் திகதி வரை ஆண்டொன்றுக்கு முப்பத்து மூன்று சதவீதப்படி (33%) வட்டியையும் விளம்பரச் செலவுகளையும் உறப்பட்ட வேறு அறவீடுகளையும், அதன் பின்னர் கொடுப்பனவுகள் எவையும் பெறப்பட்டிருப்பின் அவற்றைக் கழித்தும் அறவிடுவதற்காக, சொல்லப்பட்ட 2115 ஆம் இலக்க முறியினால் செலான் வங்கி ப. வ. கம்பனிக்கு ஈடுவைக்கப்பட்டதும் இதற்கான அட்டவணையில் மேலும் விவரிக்கப்படுவதுமான ஆதனம் உத்தரவுபெற்ற ஏலதாரர் திரு. ஐ. டபிள்யூ. ஜயசூரிய என்பவரால் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்பட வேண்டுமென செலான் வங்கி ப. வ. க. பணிப்பாளர் சபை 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தினால் உரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் கீழ் இத்தால் தீர்மானிக்கின்றது."

அட்டவணை

மத்திய மாகாணம், கண்டி மாவட்டத்தில், தும்பன உடபலாத்த கிழக்கு கோறளேயில் குருகமவில் அமைந்துள்ள "டிரபோர்ட் ஹில் எஸ்ரேட்" என்றழைக்கப்படும் காணியின் பகுதியாயுள்ளதும் உத்தரவுபெற்ற நில அளவையாளர் எஸ். ஏக்கநாயக்காவால் தயாரிக்கப்பட்ட 1988, மாச்சு 12 ஆந் திகதிய 194 ஆம் இலக்க வரைபடத்தில் துண்டு 1 எனக் குறிக்கப்பட்டுக் காட்டப்பட்டதுமான பிரித்து வரையறுக்கப்பட்ட காணிப்பங்கீடு முழுவதும் சொல்லப்பட்ட துண்டு 1 எனக் குறிக்கப்பட்ட காணிப்பங்கீட்டின் எல்லைகள்- வடக்கு : துண்டு 2 மற்றும் எச். எஸ். தோமஸ் சில்வாவுக்குச் சொந்தமான டிரபோட் ஹில் எஸ்ரேட் டின் பகுதி ; கிழக்கு : துண்டு 2 ; தெற்கு : நடைபாதை ; மேற்கு : வரைபடம் இல. 563 இல் துண்டு 4. மூன்று றூட் இருபத்தேழு பேர்ச்சஸ் (0ஏ. 3றூ. 27பே.) விஸ்தீரணமுள்ள இது கண்டி காணிப்பதிவகத்தில் தொகுதி பக்கம் K280/ 249 இல் கீழ் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

மத்திய மாகாணம், கண்டி மாவட்டத்தில், தும்பன உடபலாத்த கிழக்கு கோறளேயில் குருகமவில் அமைந்துள்ள 'டிரபோர்ட் ஹில் எஸ்ரேட்' என்றழைக்கப்படும் காணியின் பகுதியாயுள்ளதும் உத்தரவுபெற்ற நில அளவையாளர் எஸ். ஏக்கநாயக்கவால் தயாரிக்கப்பட்ட 1988.03.12 ஆந் திகதிய 194 ஆம் இலக்க வரைபடத்தில் துண்டு 2 எனக் குறிக்கப்பட்டுக் காட்டப்பட்டதுமான பிரித்து வரையறுக்கப்பட்ட காணிப்பங்கீடு முழுவதும். சொல்லப்பட்ட துண்டு 2 எனக் குறிக்கப்பட்ட காணிப்பங்கீடு முழுவதும். சொல்லப்பட்ட துண்டு 2 எனக் குறிக்கப்பட்ட காணிப்பங்கீட்டின் எல்லைகள்- வடக்கு : கம்மன்னேகும்புர மற்றும் வனாத்த ; கிழக்கு : காணிச்சீர்திருத்த ஆணைக்குழுவுக்குச் சொந்தமான "டிரபேர்ட் ஹில் எஸ்ரேட்" டின் இறப்பர் நடப்பட்ட பகுதி மற்றும் நடைபாதை ; தெற்கு : நடைப்பாதை ; மேற்கு : சொல்லப்பட்ட வரைபடம் இல. 194 இல் துண்டு 1. நான்கு ஏக்கர் இருபத்திரண்டு பேர்ச்சஸ் (4ஏ. 0றூ. 22பே.) விஸ்தீரணமுள்ள இது கண்டி காணிப்பதிவகத்தில் தொகுதி பக்கம் K280/ 250, 262 இன்கீழ் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

சீ. கொட்டிகல,
சிரேஷ்ட பிரதிப் பொது முகாமையாளர் - சட்டம்.

10-646/ 2

வரையறுக்கப்பட்ட செலான் வங்கி

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் வரையறுக்கப்பட்ட செலான் வங்கிப் பணிப்பாளர் சபையினால் அங்கீகரிக்கப்பட்ட தீர்மானம்

கணக்கு இல. : 0400-06858170-001- (சரிக்கமுல்ல கிளை).

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 8 ஆம் பிரிவின் கீழ் வரையறுக்கப்பட்ட செலான் வங்கிப் பணிப்பாளர் சபையினால் 2007.05.24 ஆந் திகதி நடத்தப்பட்ட கூட்டத்தில் பின்வருமாறு விசேடமாகவும் ஏகமனதாகவும் தீர்மானிக்கப்பட்டதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது :-

"தெகிவளையைச் சேர்ந்த ஹந்தபன்கொடகே ஹசித சந்திரசேகர என்பவர் "கடனெடுத்தவர்" என்ற வகையில் வரையறுக்கப்பட்ட செலான் வங்கியின் சார்பில் பிரசித்த நொத்தாரிசு ரி. பி. கருணாசேகர என்பவரால் அத்தாட்சிப்படுத் தப்பட்ட 2000, செத்தெம்பர் 12 ஆந் தேதிய 387 ஆம் இலக்க, 2001, செத்தெம்பர் 28 ஆந் திகதிய 579 ஆம் இலக்க, 2001, நவெம்பர் 06 ஆந் திகதிய 595 ஆம் இலக்க மற்றும் 2003, யூலை 28 ஆந் திகதிய 808 ஆம் இலக்க முறிகளின்மீது வருமதியான கொடுப்பனவில் தவணை தவறியுள்ளார். ஆதலால், இப்பொழுது 2006, திசெம்பர் 12 ஆந் திகதியன்றுள்ளவாறு சொல்லப்பட்ட முறியின் மீது எழுபத்திமூன்று இலட்சத்து எண்பத்தெட்டாயிரத்து நானூற்றெழுபத்தொன்பது ரூபா எழுபத்திரண்டு சதம் (ரூ. 73,88,479.72) வரையறுக்கப்பட்ட செலான் வங்கிக்கு உரியதாகச் செலுத்தப்படவேண்டியுள்ளது. ஆதலால் சொல்லப்பட்ட எழுபத்திமூன்று இலட்சத்து எண்பத்தெட்டாயிரத்து நானூற்றெழுபத்தொன்பது ரூபா எழுபத்திரண்டு சதம் (ரூ. 73,88,479.72) பணத்தொகையையும் 2006, திசெம்பர் 13 ஆந் திகதி முதல் விற்பனைத் திகதிவரை ஆண்டொன்றுக்கு முப்பத்து மூன்று சதவீதப்படி (33%) வட்டியையும் விளம்பரச் செலவுகளையும் உறப்பட்ட வேறு அறவீடுகளையும் அதன் பின்னர் கொடுப்பனவுகள் எவையும் பெறப்பட்டிருப்பின் அவற்றைக் கழித்தும் அறவிடுவதற்காக, சொல்லப்பட்ட 387, 579, 595, 808 ஆம் இலக்க முறிகளினால் வரையறுக்கப்பட்ட செலான் வங்கிக்கு ஈடுவைக்கப்பட்டதும், இதற்கான அட்டவணையில் மேலும் விபரிக்கப்படுவதுமான ஆதனங்கள் உத்தரவுபெற்ற ஏலதாரர் திரு. ஐ. டபிள்யூ. ஜயசூரிய என்பவரால் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்பட வேண்டுமென வரையறுக்கப்பட்ட செலான் வங்கிப் பணிப்பாளர் சபை 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தினால் உரித்தாக்கப்பட்ட தத்துவங்களின்கீழ் இத்தால் தீர்மானிக்கின்றது."

அட்டவணை

மேல் மாகாணம், களுத்துறை மாவட்டத்தில் பாணந்துறை தொட்டமுனேயின் பாணந்துறை தல்பிட்டி தெபத்தவில் பாணந்துறை நகரசபை எல்லைகளினுள் வலனவில் அமைந்துள்ள "நெதன்முல வத்த" மற்றும் பெலவத்தையின் துண்டுகள் 1இ, 1 ஆ, துண்டு 3 மற்றும் துண்டு 4 என்றழைக்கப்படும் காணி தொடர்பில் உத்தரவுபெற்ற நில அளவையாளர் எல். டபிள்யூ. எல். த சில்வா என்பவரால் தயாரிக்கப்பட்ட 1993.05.30 ஆந் திகதிய 10494 ஆம் இலக்க வரைபடத்தில் துண்டு 1 எனக் குறிக்கப்பட்டுக் காட்டப்பட்டதுமான

காணிப்பங்கீடு முழுவதும் அதன்கண் அமைந்துள்ள கட்டிடங்கள், மரங்கள், தோப்புகள், நிலம் மற்றும் ஏனைய எல்லாவற்றுடனும். இதன் எல்லைகள்– வடக்கு : நிதமுலவத்தையின் வரையறுக்கப்பட்ட பகுதி மற்றும் வரைபடம் இல. 1044 இல் துண்டு 1ஏ தற்போது எச். எச். சந்திரசேகரவுக்குச் சொந்தமாயுள்ளது ; கிழக்கு : வரைபடம் இல. 1044 இல் துண்டு 1ஏ மற்றும் துண்டு 3 (20 அடி அகல வீதிக்கான ஒதுக்கம்) ; தெற்கு : வரைபடம் இல. 1542 இல் அதே காணியின் துண்டு 2 ; மேற்கு : ஹிக்கஹவத்த அல்லது கஹட்டகஹவத்த அல்லது நிதன்முலகஹவத்த மற்றும் டி. பி. கருணாரத்னவின் உரித்தாளிகளால் உரிமைகோரப்படும் பெலவத்தையின் ஒரு பகுதி. சொல்லப்பட்ட 10494 ஆம் இலக்க வரைபடத்தின்படி ஒரு றூட் பதினொன்று தசம் ஐந்து பூச்சியம் பேர்ச்சஸ் (0ஏ. 1றூ. 11.50பே.) விஸ்தீரணமுள்ள இது பாணந்துறை காணிப்பதிவகத்தில் தொகுதி பக்கம் F387/64 இன்கீழ் பதிவுசெய்யப்பட்டுள்ளது. அதனுடன் பிரசித்த நொத்தாரிசு டபிள்யூ. என். அபேரத்னவால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 1991.02.07 ஆந் திகதிய 408 ஆம் இலக்க உறுதியில் குறித்துரைக்கப்பட்ட வரைபடம் இல. 1542 இல் காட்டப்பட்ட துண்டு 3 (20 அடி அகல வீதிக்கான ஒதுக்கம்) இன் மேலாக வழிஉரிமை கொண்டதாக.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

சீ. கொட்டிகல,
சிரேஷ்ட பிரதிப் பொது முகாமையாளர் – சட்டம்.

10–646/3

வயம்ப அபிவிருத்தி வங்கி

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடனை மீள அறவிடல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் விதிமுறையின் கீழ் கிடைக்கப்பெற்றுள்ள அதிகாரத்தின் பிரகாரம் 1997 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க பிரதேச அபிவிருத்தி வங்கிச் சட்டத்தின் 43 ஆம் பிரிவின் நடவடிக்கையின் கீழ், குறிப்பிட்ட வங்கியின் பதிலாளியாகிய வயம்ப அபிவிருத்தி வங்கி சட்ட ஒதுக்கீட்டின் பிரகாரம் நிறைவேற்றப்பட்ட தீர்மானம்

